Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 | திருவள்ளுவர் ஆண்டு: 2036 | புரட்டாதி- 20 | ஹிஜ்ரி 1428 | ரம்ழான் 02 (06.10.2005) | வியாழக்கிழமை | இதழ்:06


மங்கள நிகழ்வுகளுக்கு மங்களகரமான ஸ்தாபனம்

முற்றிலும் நவீனமயப்படுத்தி, குளிரூட்டப்பட்ட காட்சியறை



குமரகுரு புடவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை,
கிளிநொச்சி.



## தீருவில் புனித சதுக்கத்தில் நடைபெற்ற பன்னிரு வேங்கைகளின் நினைவுநாள்!

பருத்தித்துறை —

1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை அரசாங்கங்களின் கூட்டுச் சதியால் வீரச்சாவடைந்த லெப்ரினன்ட் கேணல் குமரப்பா, லெப்ரினன்ட் கேணல் புலேந்திரன் உட்பட பன்னிரு வேங்கைகளின் 18 ஆவது ஆண்டு நினைவு தினம் தீருவில் புனித சதுக்கத்தில் நேற்று மாலை 5 மணியளவில் வெகுஜன அமைப்புக்கள் ஒன்றியத் தலைவர் சேர்ந்த மு.தங்கவேல் தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப நிகழ்வாக மாவீரர் சுதாவின் தந்தையார் முத்துச்சாமி ஐயர், மேஜர் கில்மனின் தாயார் திருமதி சாம்பசிவம் ஆகியோர் பொதுச்சுடரை ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தேசியக் கொடியை நான்கு மாவீரர்களின் தந்தையார் உருத்திராபதி ஏற்றிவைத்தார். அதனையடுத்து பொது ஈகச்சுடரை கரும்புலிகப்டன் சிதம்பரத்தின் சகோதரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து லெப்ரினன்ட் கேணல் குமரப்பாவின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஈகச்சுடரை பெரியதாயார் பகவதி ஏற்றிவைத்தார். லெப்ரினன்ட் கேணல் புலேந்திரனின் திருவுருவப்படத்திற்கு மலர் மாலையை அணிவித்து ஈகச்சுடரை மாவீரரின் தாயார் மகேஸ்வரி ஏற்றிவைத்தார்.

இதனைத் தொடர்ந்து பத்து மாவீரர்களின் திருவுருவப்படத்திற்கான (12 ஆம் பக்கம் பார்க்க)

### போர் நெருக்கடியை தவிர்ப்பது பற்றி பேச

## நோர்வே தூதுவர் பிரட்ஸ்கர்

## இன்று கிளிநொச்சி வருகை!

கொழும்பு —

அண்மைக்காலமாக அதிகரித்துள்ள வன்முறைச் சம்பவங்கள் - போர் நெருக்கடிகளை நோக்கிச் செல்வதைத் தடுக்கும் வகையிலான பேச்சுக்களை நடத்துவதற்காக இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று கிளிநொச்சி வரவுள்ளார்.

இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சிக்கு வரும் நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர்- அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடலை நடத்தவுள்ளார்.

தூதுவரின் கிளிநொச்சி பயணத்தை உறுதிப்படுத்திய நோர்வே தூதரக பெண் பேச்சாளர் ஜெஸ்ரி றொமஸ்டால் - மேலதிக விபரங்களைத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

நோர்வே தூதுவரின் இன்றைய சந்திப்பு வழமையானதென விடுதலைப் புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலை ஆதரிப்பதாக ரவூப் ஹக்கீம் அறிவிப்பு!

கொழும்பு —

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று நண்பகல் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இதை அறிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டோ சாரதி மீது வெலிக்கந்தவில் சூடு

பொலனறுவ —

பொலனறுவ மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தவில் ஓட்டோ சாரதி ஒருவர் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 5.25 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் சம்பத் (வயது 26) என்ற ஓட்டோ சாரதியே படுகாயமடைந்தவராவார்.

காயமுற்ற இவர் வெலிக்கந்த வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் பொலனறுவ வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

## யாழ்.பல்கலைக்கழகத்தில் இன்று 2375 மாணவர்களுக்கு பட்டமளிப்பு!

## சாதனை புரிந்த இளையோர்களுக்கு தேசிய விருது வழங்கிக் கௌரவிப்பு!

## 2375 மாணவர்களுக்கு பட்டமளிப்பு!

யாழ்ப்பாணம்

யாழ். பல்கலைக்கழக வரலாற்றிலேயே முதல் தடவையாக மிக அதிகளவு மாணவர்களுக்கு இன்று பட்டமளிப்பு நடைபெறவுள்ளதாக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்தார்.

இன்றும், நாளையும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவில் 2375 மாணவர்களுக்கு பட்டம் வழங்கி கௌரவிக்கப்படும். இதற்கமைய 24ஆவது பட்டமளிப்பு விழா இன்றும், நாளையும் தலா ஐந்து அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

முதலாம் அமர்வு காலை 9 மணிக்கும், இரண்டாவது அமர்வு(12 ஆம் பக்கம் பார்க்க)

## முடிவை மாற்றினார் மகேஸ்வரன்; ரணில் அழைத்து சமரசம் செய்தார்!

கொழும்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரனை எந்தச் சந்தர்ப்பத்திலும் கட்சியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது என அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனை தனது வாசஸ்தலத்திற்கு அழைத்த ரணில் விக்கிரம சிங்க அவருடன் பேச்சு நடத்தினார்.

இதன்போது அண்மைக் காலமாக மகேஸ்வரன் கட்சியின் கொள்கைக்கு முரணாக செயற்பட்டு வருவதாகவும், இதனால் கட்சிக்குள் சில நெருக்கடிநிலையை (12 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனையில் துப்பாக்கிச் சூடு; தேங்காய் வியாபாரி மரணம்!

அம்பாறை

அம்பாறை - கல்முனையில் தேங்காய் வியாபாரியான முஸ்லிம் ஒருவர் நேற்றுக்காலை 6.30 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கல்முனையைச் சேர்ந்த சீனிமுகம்மது வகாப் (வயது28) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மற்றுமொரு வியாபாரியான மொகமட் சுலைமான் லெப்பையனூர் (வயது 32) படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சந்தையில் வியாபாரம் செய்யும் இவர்கள் இருவரும் மோட்டார் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய விருது வழங்கிக் கௌரவிப்பு!




கிளிநொச்சி

குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிருவேங்கைகள் நினைவாக 2005 ஆம் ஆண்டின் விளையாட்டுக்கான தமிழீழ தேசிய கௌரவிப்பு விழா நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தூயவன் அரசறிவியற் கல்லூரியில் நடைபெற்றது.

தமிழீழ விளையாட்டுத்துறைத் தலைவர் ம.பத்மநாதன் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணிலுக்கு ஆதரவளிக்க தொண்டமானும் முடிவு!

கொழும்பு

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நேற்றுக் காலை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

கொழும்பு ட்ரான்ஸ் ஏசியா விடுதியில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் இ.தொ.க.தலைவர் ஆறுமுகம் தொண்டமான் இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

இ.தொ.க முன்வைத்த 19 நிபந்தனைகளையும் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டதால் அவரை ஆதரிக்க தமது கட்சி முடிவு செய்துள்ளதாக தொண்டமான் கூறினார்.

ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதால் அமைச்சரவையிலிருந்து இ.தொ.க அமைச்சர்களான செல்லச்சாமியும், முத்து சிவலிங்கமும் இராஜினாமா செய்ய வுள்ளனர்.

வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பிய பின்பு இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

# மோட்டார் சைக்கிள் பதிவு, உடைமை மாற்றும் நடைமுறை குறித்து உதவி ஆணையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்

யாழ்.மாவட்டத்தில் விற்பனை செய்யப்படும் புதிய மோட்டார் சைக்கிள்களின் பதிவு இந்தத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் தற்போது விற்பனை செய்யப்படும் நிறுவனத்தால் (மோட்டார் சைக்கிள் இறக்குமதி நிறுவனங்களின் ஏக விநியோகஸ்தர்களால்) நேரடியாக கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திலும் பதிவுசெய்யப்பட்டு வருவதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் வி.பத் நாதன் தெரிவித்தார்.

புதிய மோட்டார் சைக்கிள்களை பதிவு செய்வதும் அந்த வாகனங்களின் உடைமைமாற்றும்நடைமுறைகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது -

யாழ்.மாவட்டத்தில் கொள்வனவு செய்யப்படும் புதிய மோட்டார் சைக்கிள்களை இந்தத் திணைக்களத்தில் பதிவு செய்வதன் மூலம் உரிமையாளர்களும் மற்றும் இந்த வாகனங்களை உடைமைமாற்றம்செய்யும்போது அதன் புதிய உரிமையானர்களும் பல நன்மைகளை பெற்றுக் கொள்ளமுடியும்

கொள்வனவு செய்யப்படும் மோட்டார் சைக்கிள்களை உரிய திகதிக்குள் (கொள்வனவு செய்து 30 வேலை நாட்களுக்குள்) பதிவு செய்ய விண்ணப்பிக்குமிடத்து விண்ணப்பக்கட்டணம் ரூபா 1400 மட்டும் அறவிடப்படும்.

புதிய பதிவிற்காக விண்ணப்பித்து வாகனப்பரிசோதனை செய்த திகதியிலிருந்து 5 வேலை நாட்களுக்குள் வாகனப் பதிவுச் சான்றிதழ், வாகன அடையாள அட்டை, வாகன இலக்கத் தகடு ஆகியவற்றை இந்தத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தத் திணைக்களத்திலேயே பதிவு செய்யப்படும் வாகனங்களின் ஆவணங்கள் பேணப்படுவதால் வாகனப் பதிவுச் சான்றிதழ், வாகன அடையாள அட்டை ஆகியன தொலைந்து அதன் பிரதிகளைப் பெறுதல், பதிவுச் சான்றிதழ் மாற்றங்கள் மேற்கொள்ளல், வாகனத்தின் விபரங்களைப் பெறுதல் ஆகிய செயற்பாடுகளை இந்தத் திணைக்களத்திலேயே விண்ணப்பித்து உடன் பெற்றுக் கொள்ளமுடியும். (இதன்போது ஆவணங்களை கொழும்புக்கு அனுப்பி பெறவேண்டியநிலை இல்லாதிருப்பதுடன் பொதுமக்கள் தமது சகல தேவைகளுக்கும் இந்தத் திணைக்களத் துடனேயே தொடர்புகளை மேற்கொண்டால் மட்டும் போதுமானது)

இதேபோன்று மேற்படி வாகனங்களைஉடைமைமாற்றம்செய்யுமிடத்து அந்த வாகனங்களை புதிதாகக் கொள்வனவு செய்தவர்கள் தமது விண்ணப்பங்களை தமது பிரதேச செயலகம் ஊடாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துக்கு அனுப்பி வைப்பதன் மூலம் வாகன உடைமை மாற்றங்களை இந்தத் திணைக்களத்திலேயே இலகுவாக மேற்கொள்ள முடியும்.

இந்தத் திணைக்களத்துக்கு பிரதேச செயலகத்திலிருந்து விண்ணப்பங்கள் கிடைத்த திகதியில் இருந்து ஒரு மாதத்துக்குள் வாகனப்பதிவுச் சான்றிதழ், வாகன அடையாள அட்டை என்பவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும். இதன்போதும் ஆவணங்களை கொழும்புக்கு அனுப்பி பெறவேண்டியநிலை இல்லாதிருப்பதுடன், பொதுமக்கள் தமது சகல தேவைகளுக்கும் இந்தத் திணைக்களத்துடனேயே தொடர்புகளை மேற்கொண்டால் மட்டும் போதுமானதாக அமைகிறது.

விற்பனை செய்யப்படும் நிறுவனம் ஊடாக (மோட்டார் சைக்கிள் இறக்குமதி நிறுவனங்களின் ஏக விநியோகஸ்தாகள் மூலம்) நேரடியாகக் கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படும் மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்கள் அவர்களது வாகனம் தொடர்பான பதிவுகள் எதுவும் இந்தத் திணைக்களத்தில் இல்லாதமையால் நேரடியாக கொழும்பு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்துடனேயே தொடர்புகொள்ளவேண்டிய நிலை ஏற்படும்.

# மந்துவிலில் கோஷ்டி மோதல்; எட்டுப் பேர் காயமடைந்தனர்

சாவகச்சேரி

மந்துவில் பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் எட்டுப் பேர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மந்துவிலைச் சேர்ந்த ஜெயவதனி (வயது 24), வதனி (வயது 40), இராஜநாயகம் (வயது 47), ஸ்ரீஸ்கந்தராசா (வயது 52), குகதர்ஷன் (வயது 19), கங்காகரன் (வயது18), மதன் (வயது 16), ஐயாத்துரை (வயது 54) ஆகியோரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது - கடந்த சில நாட்களாக இருவரிடையே ஏற்பட்ட முரண்பாடு குழுமோதலாக வெடித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரு குழுக்களும் மாறிமாறி வாள், பொல்லு, கத்தி போன்றவற்றைப் பயன்படுத்தி மோதலில் ஈடுபட்டதாகவும்- காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், சார்மி, பிரகாஷ்ராஜ் மற்றும் பலர்நடித்த
அநுமான்
காட்சிகள் 11.00, 2.45, 6.00 (புதிய நேரம்)

# பட்டமேற் கல்வி டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம்

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தில் பட்டமேற் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு தோற்றும் 200 மாணவர்களில்- அனுமதி அட்டை இதுவரை கிடைக்காதவர்கள் பதிவுப்புத்தகத்துடன் பரீட்சை மண்டபத்துக்கு வருமாறு யாழ். பிராந்திய இயக்குநர்எந்திரி ஆ.ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலிருந்து அனுப்பி வைத்த அனுமதியட்டையில் பிராந்திய நிலையத்தில் பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சைக்கிள் வழங்கல்

புதுக்குடியிருப்பு

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பின் நிதியுதவியுடன் வட-கிழக்கு முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்தினால் சைக்கிள் வழங்கும் நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு புதுக்குடியிருப்பு அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிறுவனங்களின் உதவியுடன் சைக்கிள் வழங்கும் நிகழ்வுகள் இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்திலும், மல்லாவியில் பி.ரி.ஆ.ஏ. மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

# சர்வதேச சிறுவர், முதியோர் தினம்

வடமராட்சி

கட்டைவேலி நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நடத்தும் சர்வதேச சிறுவர், முதியோர் தின நிகழ்வு நாளை பிற்பகல் 3 மணிக்கு நெல்லியடி முருகன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - சமூக சேவையாளர் ந.பாஸ்கரன் பிரதமவிருந்தினராகவும், நெல்லியடி மக்கள் வங்கி முகாமையாளர் இ.சிவஞானசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும், நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் செ.சேதுராஜா, விக்னேஸ்வராகல்லூரி அதிபர் வே.சிவசிதம்பரம், ஞானசாரியார் கல்லூரி அதிபர் எஸ்.ஸ்ரீராமச்சந்திரன், வடமராட்சி மத்திய கல்லூரி அதிபர் திருமதி வி.சுகுமார் ஆகியோர் கௌரவவிருந்தினராகவும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. பண்டிதர் சா.வே.பஞ்சாட்சரம் ஓய்வுபெற்ற ஆசிரியர் சிறப்புரை நிகழ்த்துவார்.

சிறு விளம்பரம்
விற்பனைக்கு
பிஸ்கட் தயாரிப்பதற்கான பிஸ்கட் அச்சு, மா குழைக்கும் இயந்திரம், மின்சாரத்தில் இயங்கும் பெரிய அவண் மற்றும் காலால் இயக்கும் பொலித்தீன் சீலர் என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு - தி.கிருஷ்ணராசா, 190, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 0777112918 (2075)

# முன்பள்ளி ஆசிரியர்கள் கௌரவிப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்

சர்வதேச ஆசிரியர் தினமான இன்று யாழ்.பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு கொட்டடி நமசிவாயம் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் அனைத்து ஆசியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தின் பிரதேச இணைப்பாளர் சி.கார்த்தியாஜினி கேட்டுள்ளார்.

கிளிநொச்சி

தமிழர் புனர்வாழ்வுக்கழகமும், முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையமும் இணைந்து நடத்தும் முன்பள்ளி ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வு இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம்

வடக்கு -கிழக்கு மாகாண முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம், யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் தெல்லிப்பளை பிரதேச முன்பள்ளி ஆசிரியர் தினம் இன்று மாலை 3.30 மணிக்கு அளவெட்டி மகாஜனா சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தெல்லிப்பளை பிரதேச முன்பள்ளி ஆசிரியர்கள், வலிகாமம் வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய வலய இணைப்பாளர், பிரதேச இணைப்பாளர்கள், மக்கள் கட்டமைப்புத் தலைவர்கள், உறுப்பினர்கள் மற்றும் யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர், யாழ்.மல்லாகம் விசாலாட்சி பாடசாலை அதிபர், வலி வடக்கு பிரதேச சபை செயலாளர், மல்லாகம் அளவெட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நெடுந்தீவு

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் ஆசிரியர் தினவிழா நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் இன்று முற்பகல் 11.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தீவக கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி பெனஸ்டலாதேவி அரசரத்தினம் பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். ஆசிரியர்கள் அழைத்து வரப்பட்டு கௌரவிக்கப்படவுள்ளதுடன் பாடசாலை மாணவர்களது கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (113)

"வாசியுங்கள் அகவிழி திறக்கும்"
விசேட விலைக் குறைப்பில் புத்தகங்கள்
இம்மாதம் 31 ஆம் திகதி வரை
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவ நோக்கு...
AHAVILI, 3, Torrington Avenue, Colombo-7, Sri Lanka. Tel.: 011-2506272 E-mail: ahavili@rlluthu.org
BOOK LAB
பரமேஸ்வராச் சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(C/4683)


பாராட்டி வாழ்த்துகின்றோம்
தர்மகுலசிங்கம்
தர்சினி
இன்று யாழ். பல்கலைக்கழகத்தில் கலைமானி B.A பட்டம்பெறும் இவரை மேலும் பல பட்டங்கள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.
கனகசபை வீதி, மானிப்பாய்.
கி.தர்மகுலசிங்கம் - குடும்பத்தினர்.
(C/4701)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

இன்று யாழ்.பல்கலைக்கழகத்தில் வணகமானிபட்டம் (2nd upper) பெறும்
செல்வி
ஷியாளினி தருமராசா
அவர்களை பாராட்டுவதோடு மேலும் பல பட்டங்கள் பெறவேண்டுமென மனதார வாழ்த்துகின்றோம்.
ஏழாலை தெற்கு களவோடை.
- குடும்பத்தினர்.
(C/4700)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு சூர்யா, அஸின், நயன்தாரா, பிரகாஸ்ராஜ் நடித்த

கஜினி
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்
காட்சிகள்:-10.30, 2.30, 6.30, 9.30 (பு.நேரம்)

மனோகரா யாழ்ப்பாணம்
சிறிகாந்த், சோனியாஅகர்வால் மற்றும் பலர் நடித்த

ஒரு நாள் ஒரு கனவு
காட்சி நேரம் : (பு.நே) 10.30, 2.30, 6.30, 9.30

சுன்னாகம் நாகம்ஸ்
ஜெயம் ரவி, கலாபவன் மணி, வடிவேல் மற்றும் பலர் நடித்த

மழை
காட்சிகள்:-11.00, 3.00, 7.00, 10.00 (பழையநேரம்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
சரத்குமார், வைகைப்புயல் வடிவேலு, நமீதா நடித்த

சாணக்யா
காட்சிகள்:-10.30, 2.30, 6.30, 9.30 (புதிய நேரம்)

ஹற்றன் நஷனல் வங்கி
யாழ்ப்பாணம்
பகிரங்க ஏல விற்பனைக்கான
அறிவித்தல்
ஹற்றன் நஷனல் வங்கி
யாழ். கிளையில்
30.07.2004 இற்கு
முன்னர் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத
அடகு நகைகள் 08.10.2005
சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல்
யாழ்.கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில்
விற்பனைக்கு விடப்படும் என்பதனை
அறியத்தருகின்றோம்.
- முகாமையாளர்.
(C/4702)

# தேர்தல் பிரசாரத்துக்கு அரச நிதி; பிரதமரின் செயலாளர் மறுப்பு!

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு அலரிமாளிகையில் நடைபெறும் அரசியல் கூட்டங்களுக்கு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பொது மக்களின் பணத்தை தவறான முறையில் பயன்படுத்துகின்றார் என ஐ.தே. கட்சி தெரிவித்த குற்றச்சாட்டை பிரதமரின் செயலாளர் லலித் வீரதுங்க மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது-

ஐ.தே.கட்சியின் இந்தக் குற்றச்சாட்டானது அரச சேவை ஊழியர்களை அரசியல் ரீதியாக அச்சுறுத்தும் செயற்பாடாகும். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக ஐ.தே.கட்சி ஆதாரங்கள் எவற்றையும் சமர்ப்பிக்கவில்லை.

அரச நிதியை அரசாங்கம் எவ்வித பொழுது போக்கு தேவைகளுக்காகவும் பயன்படுத்தவில்லை. அத்துடன் இந்தக் காலப் பகுதியில் எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. எனவே, ஐ.தே கட்சியின் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக அவர்களுக்கு விரைவில் விளக்கவுள்ளேன் என கூறியுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது அரசியல் நோக்கத்துக்காக பொது நிதியை அலரிமாளிகையில் தவறாகப் பயன்படுத்துகின்றார். இந்த தவறான பயன்பாடு பொது நிதி மட்டுமல்லாது, பொதுச் சொத்துக்கள் என்ற வகையிலும் அடங்குமென ஐ.தே.கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பிரதமரின் செயலாளர் லலித் வீரதுங்கவுக்கு முன்னர் கடிதம் அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மின்சார சபைத் தலைவர் திடீரெனப் பதவி நீக்கம்

கொழும்பு—

இலங்கை மின்சாரசபைத் தலைவர் ஆனந்த சேகர கடந்த திங்கட்கிழமை திடீரெனப் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

இவருக்கான பதவி நீக்கக் கடிதம் எரிபொருள் மின்சக்தி துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவினால் அனுப்பி வைக்கப்பட்டதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மின்சார சபையின் நடவடிக்கைகளைச் செயற்திறன் மிக்கதாக ஆக்கும் வகையிலேயே இந்தப் பதவி விலக்கலை மேற்கொண்டதாக அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

மின்சார சபைத் தலைவருக்கும், மின்சாரசபை தொழிற் சங்கத்திற்குமிடையே நீண்டகாலமாக முரண்பாடுகள் நிலவி வந்த நிலையில் மின்சாரசபைத் தலைவரை பதவி விலக்குமாறு மின்சார சபை பொறியியலாளர் சங்கம் - அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (தே)

# சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டில் தெளிவில்லை

## சபையில் ரவிராஜ் எம்.பி

கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரினதும், அந்தக் கட்சியினதும் கொள்கைகள் அடங்கிய விஞ்ஞாபனம் வெளியிடப்படாத வரைக்கும் தமது நிலைப்பாடுகளைத் தெரிவிக்க முடியாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஒரு நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் போது, பிரதமர் மற்றுமொரு நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாகவும் அவர் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் தொடர்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு குறித்து தெளிவின்மை காணப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐரோப்பிய ஆணைக்குழுவின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர் கிளிஸ் பேர்ட்டுன் நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் வைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்தார்.

இங்கு வடக்கு-கிழக்கு மக்கள் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது நாட்டில் அமுல் படுத்தப்பட்டுள்ள அவசரகால சட்டத்தால் தமிழ் மக்களே கூடுதலாக பாதிக்கப்படுவதாக தமிழ்த்தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரிடம் எடுத்துரைத்தாகத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை

# லஞ்ச ஆணைக்குழுவில் ஐ.தே.கட்சி முறைப்பாடு

கொழும்பு—

ஹெல்ப்பிங் அம்பாந்தோட்ட நிதியில் முறைகேடுகள் இடம்பெற்றதாகவும், அது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் கோரி ஐக்கிய தேசியக் கட்சி லஞ்ச விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துதுள்ளது.

இந்த முறைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கருணாதிலக செய்துள்ளார்.

குறித்த நிதி தனியார் வங்கியில் வைப்புச் செய்ததற்குப் பிரதமரின் செயலர் பொறுப்புக் கூற வேண்டும் என இம்முறைப்பாட்டு மனுவில் கேட்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இந்த மனு பற்றி விசாரணை செய்வதற்கு உயர் நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# சட்டத்தரணியாக வேடமிட்ட பெண்ணுக்கு விளக்கமறியல்!

கொழும்பு—

சட்டத்தரணி போல வேடமிட்டு நீதிமன்றத்திற்குள் நடமாடியதாகக் கைது செய்யப்பட்ட தமிழ் பெண்ணுக்கு எந்தவித மனநோயும் இல்லை என்று வாழைத்தோட்ட பொலிஸார், கடந்த திங்கட்கிழமை கொழும்பு பிரதான நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இது தொடர்பான வழக்கு கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது நீதிமன்றத்தில் வைத்திய அறிக்கை சமர்ப்பித்த பொலிஸார் சந்தேக நபருக்கு எந்தவித மனநோயும் இல்லை என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளதாகவும், அதனால் ஆள் மாறாட்டம் செய்ததற்காக, அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்படும் என்றும் கூறினர்.

சந்தேக நபரான முத்தழகு கார்த்திகாயினியின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சந்தேக நபரின் கணவர் நஞ்சருந்தி மரணமடைந்தமையால் அவர் மன உளைச்சலுக்கு இலக்காகியிருந்ததாகவும்,அதனைக் கவனத்தில் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார்.

ஆள்மாறாட்டம் செய்த விடயத்தில் தான் குற்றவாளியென சந்தேக நபர் நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டுள்ளார்.

ஆள்மாறாட்டம் செய்து நீதிமன்றத்தினுள் சட்டத்தரணியைப் போல நடமாடியது மிகப் பெரிய குற்றமெனக் கூறிய நீதவான் சரோஜினி குசலா வீரவர்த்தன சந்தேக நபரை எதிர்வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும், அவருக்கான தண்டனை பற்றி அன்றைய தினம் அறிவிப்பதாகவும் கூறினார்.

# இராணுவம் தொடர்பான கருத்தில் முரண்படுகிறாராம் ரணில் விக்கிரமசிங்க!

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

கொழும்பு—

இராணுவம் தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தேர்தல் விஞ்ஞாபனத்தில் முரண்பபாடான கருத்துக்களை வெளிப்படுத்தி இருப்பதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியுள்ளார்.

ஊடகவியலாளர் மாநாட்டில் உரை நிகழ்த்திய விமல் வீரவன்ச-

ஆறு படைப் பிரிவுகளை ஒன்றாக்கி, புதிய படைப்பிரிவு ஒன்று உருவாக்கப்படும் என ரணில் கூறியுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் சாதாரண, ஏனைய படை நிலைகள் 847 இருக்கின்றன. மூன்று இராணுவப்படைப் பிரிவுகளை இணைத்து ஒரு படைப்பிரிவு அமைக்கப்படும். பல படைப் பிரிவுகளை உள்ளடக்கி ஒரு பிரதான படை உருவாக்கப்படும். இவ்வாறாகவே எமது நாட்டின் இராணுவ கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் 43 படைப்பிரிவுகள் உள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சோமவன்சவை நாட்டைவிட்டு வெளியே துரத்த வேண்டும்!

## தேசப்பிரேமி அமைப்பு கோரிக்கை

கொழும்பு—

இராணுவத்தினர் தொடர்பாக ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்த கருத்துக்காக - நாட்டு மக்களிடம் அவர் மன்னிப்புக் கோர வேண்டும் என தேசப்பிரேமி அமைப்புக் கோரியுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட தேசப்பிரேமி அமைப்பின் தலைவர் சுகத் ஹேவாபத்திரன- சோமவன்ச அமரசிங்க தெரிவித்த கருத்துக்கு எதிராக நாம் தொடர்ந்தும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளோம். அவர் தேசத்துரோகி எனக் கருதப்பட்டு, நாட்டில் இருந்து வெளியேற்றப்படும் வரை நாடு தழுவிய நிலையில் இந்த நடவடிக்கை இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார். (01)

# இ.தொ.காவின் நிலைப்பாட்டை இந்தியா உன்னிப்பாக கவனிப்பு!

கொழும்பு—

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தக் கட்சியின் வேட்பாளருக்காக இ.தொ.கா ஆதரவளிக்கவுள்ளதென்பது குறித்து - இந்திய அரசாங்கமும், குறிப்பாக இலங்கையிலுள்ள இந்திய இராஜதந்திரிகளும், தீவிரமாகக் கண்காணித்து வருவதாக இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது குறித்து அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இ.தொ.காவின் ஆதரவைப் பெறும் வேட்பாளரின் வெற்றி உறுதியானதென்பதால், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இந்திய சார்பு வேட்பாளரையே இ.தொ.கா ஆதரிக்க வேண்டுமென இந்தியாவின் சிரேஷ்ட இராஜ தந்திரி ஒருவர் தெரிவித்தார்.

இ.தொ.கா தலைவர் ஆறுமுகம் தொண்டமான்- ஐ.தே. கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்கவுள்ள நிலையில், சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்தவின் கொள்கைகள் இந்தியாவுக்கு சார்பானவை எனவும், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான நடவடிக்கைக்கு பிரதமர் மஹிந்த, இந்தியாவின் பூரண ஆசீர்வாதத்தைப் பெற்று விட்டாரெனவும், கொழும்பிலுள்ள இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் இ.தொ.கா தனது அரசியல் நலன் கருதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவை வழங்க வேண்டுமெனவும், விடுதலைப் புலிகள் சார்பான நிலைப்பாட்டை ஐ.தே. கட்சி கொண்டுள்ளதால் இந்தியா மிகுந்த கவலையடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாதுகாப்பு செலவின அதிகரிப்பு; யுத்தத்துக்கான நிதி ஒதுக்கீடே!

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு—

பாதுகாப்புச் செலவினத்தை அதிகரிக்க அரசு திட்டமிட்டுள்ளமை யுத்தத்துக்கான முன்னோடி நடவடிக்கை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது. பாதுகாப்பமைச்சுக்கு 2006ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடாக 69,470 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கத் திட்டமிட்டுள்ளது. கடந்த ஆண்டைவிட இது 23.29 வீதம் அதிகமானதாகும். இத்தகைய நிதி ஒதுக்கீடானது- அரசாங்கம் படையினரை யுத்தத்துக்குத் தயார்ப்படுத்துவதனையே எடுத்துக் காட்டுகிறது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தையில் விடுதலைப் புலிகளையும், அரசாங்கத்தையும் சமபங்காளிகளாக ஏற்றுக் கொண்ட ஐரோப்பிய ஒன்றியமானது இன்று ஒரு பக்கச் சார்பாக புலிகளுக்கு பயணத் தடை விதித்துள்ளது. இந்த நிலையில் பாதுகாப்பு செலவினத்தை அதிகரித்துள்ள அரசாங்கத்தின் மீது, ஐரோப்பிய ஒன்றியமும் சர்வதேசமும் எந்த நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. எத்தகைய நடவடிக்கையை எடுக்கவுள்ளன?

ஐரோப்பிய ஒன்றியத்தால் புலிகளின் பயணத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி, இந்த அமைப்பின் தலைமைப் பதவியில் உள்ள பிரிட்டனின் தூதரகத்தில் மகஜர் ஒன்றை விரைவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக் கையளிக்கவுள்ளது.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுள் 22 பேரும் கையொப்பமிட்டு இந்த மகஜரைச் சமர்ப்பிக்கவுள்ளனர். தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து ஆராய்ந்து, முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (01)

# பாதுகாப்பு பிரதேசமாகும் தேர்தல் செயலகப் பகுதி!

கொழும்பு—

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்யப்படும் அடுத்த வெள்ளிக்கிழமையன்று, தேர்தல் செயலகம் அமைந்துள்ள பகுதியிலுள்ள வீதிகள் போக்குவரத்துக்குத் தடை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகள் கடும் பாதுகாப்பு பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்படவுள்ளதாகப் பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்தது.

இதேவேளை தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான வேட்பாளர்களுக்கும் பயங்கரவாத அச்சுறுத்தல் இருப்பதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளதாக அந்த செயலகத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மாஅதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார்.

1981ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க தேர்தல் சட்ட மூலத்தின் 74ஆம் சரத்துக்கு அமைய- இன்றுடன் சட்டவிரோத தேர்தல் உருவ பதாகைகள் பிரசார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள் போன்றவை அகற்றப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் பஸ்கள் போன்ற பொதுப் போக்குவரத்து வாகனங்களில் ஒட்டப்பட்டுள்ள தேர்தல் பிரசார சுவரொட்டிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், பஸ்ஸின் சாரதியைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் காமினி நவரத்ன மேலும் தெரிவித்தார்.

# அவுஸ்ரேலியா 93 ஓட்டங்களால் உலக லெவனைத் தோற்கடித்தது!

மெல்பேர்ன் —

உலக லெவன் - அவுஸ்ரேலிய அணிகளுக் கிடையில் நேற்று மெல்பேர்னில் நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 93 ஓட்டங்களால் உலக லெவன் அணி யைத் தோற்கடித்தது.

அவுஸ்ரேலிய அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மா னித்தது.

கில்கிறிஸ்டும், கடிச்சும் தொடக்க வீரர்களாக களமிறங்கினர். வழக்கம்போலவே கிறிகிறிஸ்ட் அதிரடியாக பவுண்டரிகளை அடித்துக்கொண்டி ருக்க, கடிச்சும் தன் பங்குக்கு ஓட்டங்களைக் குவிக்கத் தொடங்கினார்.

உலக லெவன் அணியில் கைதேர்ந்த பந்து வீச்சாளர்கள் தொடக்க ஜோடியைப் பிரிப்பதற்கு மட்டுமன்றி, ஸ்கோர் உயர்வையும் கட்டுப்படுத்த முடியாமல் திணறினர்.

ஒருவாறு ஸ்கோர் 80 ஐ தொட்டபோதுதான் கில்கிறிஸ்டை வீழ்த்தியது உலக லெவன். கலிஸ் வீசிய பந்தில் போல்டாகி வெளியேறிய கில்கிறிஸ்ட் 48 பந்துகளைச் சந்தித்து 7 பவுண்டரிகளுடன் 45 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து கடிச்சுடன் அணித் தலைவர் பொண் டிங் இணைந்துகொண்டார். அவரும் தன் பங் குக்கு அதிரடியாக ஓட்டங்களைக் குவிக்க முயன் றார்.

ஸ்கோர் 128ஐ எட்டியபோது பொலக் வீசிய பந்தை அடித்து ஓட முற்பட்ட பொண்டிங் லாறா விடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேற நேரிட்டது.

பொண்டிங் 26 பந்துகளில் 1 பவுண்டரி 1 சிக்ஸருடன் 23 ஓட்டங்களை எடுத்தமை குறிப் பிடத்தக்கது.

அடுத்து மாட்டின் களமிறங்கினார். ஆனால், 3 பந்துகளைச் சந்தித்த அவர் அதே ஸ்கோரில் ஓட்டமெதையும் பெறாமலேயே ஆட்டமிழந்தார். முரளிதரனின் பந்துவீச்சில் வெட்டோரியிடம் பிடி கொடுத்து இவர் ஆட்டமிழந்தார்.

அடுத்து கடிச்சுடன் இணைந்த சைமன்ஸ் நிதானமாக ஆடத் தொடங்கினார். ஸ்கோர் உயர்ந்து 142 ஐத் தொட்டபோது அவுஸ்ரேலிய அணி 4 ஆவது விக்கெட்டைப் பறிகொடுத்தது.

79 பந்துகளில் 4 பவுண்டரிகளுடன் 58 ஓட் டங்களைப் எடுத்த கடிச் - முரளிதரன் வீசிய பந்தை தடுத்து ஆடமுற்பட்டபோது அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அடுத்து கள மிறங்கிய கிளார்க் எதிர்பார்த்ததுபோல சோபிக்க வில்லை.

வெட்டோரியின் பந்தை தடுத்தாடப்போய் அவரிடமே பிடிகொடுத்து கிளார்க் ஆட்டமிழந்த போது அவுஸ்ரேலிய அணியின் ஸ்கோர் 154 ஆக இருந்தது.

கிளார்க் 16 பந்துகளில் எடுத்த ஓட்டங்கள் வெறும் 6 மட்டும்தான். இவரையடுத்து சைமன் ஸுடன் - ஹூசே இணைந்தார்.

இந்த ஜோடி சற்று நின்றுபிடித்து நிதானமாக ஆடியது. இதனால் ஸ்கோர் 200 ஐத் தாண்டி யது. இதன்பின்னர் உலக லெவன் பந்துவீச்சா ளர் வெட்டோறியின் ஆதிக்கம் அதிகரித்தது.

ஸ்கோர் 206 ஆக இருந்தபோது சைமன்ஸ் விக்கெட்டை - வெட்டோரி கைப்பற்றினார். 54 பந்துகளில் 1 பவுண்டரி 1 சிக்ஸருடன் 36 ஓட்டங் களை எடுத்திருந்த சைமன்ஸ் அடித்த பந்தை பிளின்ரொப் பிடித்து ஆட்டமிழக்கச் செய்தார்.

தொடர்ந்து ஹூசேயுடன் வட்சன் இணைந் தார். ஆனால், ஸ்கோர் 223 ஆக இருந்தபோது வட்சன் வெட்டோரியின் பந்தை அடித்தபோது லாறாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து பவிலி யன் திரும்பினார். இவர் 15 பந்துகளைச் சந் தித்து 8 ஓட்டங்களையே எடுத்தார்.

அடுத்து ஸ்கோர் 231 ஆக இருந்தபோது ஹூசேயும் வெட்டோரியின் பந்துவீச்சுக்குப் பலி காக நேரிட்டது. இவர் 44 பந்துகளில் 1 பவுண் டரியுடன் 32 ஓட்டங்களை எடுத்தார்.

## விளையாட்டு

லீயும் - பிறக்கனும் இணைந்து ஆடிக் கொண்டிருந்தபோது நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் அவுஸ்ரேலிய அணி 8 விக்கெட் இழப்புக்கு 255 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

லீ 17 பந்துகளில் 1 பவுண்டரி 1 சிக்ஸருடன் 26 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலும், பிறக் கன் 3 பந்துகளில் 2 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

19 உதிரி ஓட்டங்களைக் கொடுத்த உலக வெலன் அணியில் வெட்டோரி - 4, முரளிதரன் - 2, பொலக் -1, கலிஸ் - 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதையடுத்து உலக லெவன் அணியின் ஜாம்பவான்கள் துடுப்பெடுத்தாடக் களமிறங் கினர். சங்ககாரவுடன், ஷேவாக் தொடக்க வீரரா கக் களமிறங்கினார்.

ஆனால், அவுஸ்ரேலிய அணியின் அபார மான பந்துவீச்சுக்குத் தாக்குப்பிடிக்கமுடியாமல் உலக லெவன் ஜாம்பவான்கள் திணறினர். ஸ்கோர் 82 ஐ எட்டுவதற்கு முன்னர் உலக லெவன் அணியின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வரிசையைச் சேர்ந்த ஐந்து வீரர்கள் ஆட்டமிழந் தனர்.

ஆகவும் பரிதாபம் என்னவெனில் இவர்களில் ஒருவர்கூட இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற வில்லை என்பதுதான்.

ஸ்கோர் 18 ஆக இருந்தபோது ஷேவாக் - மக்ராவின் பந்தை ஹூசேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இவர் 10 பந்துகளைச் சந்தித்து எடுத்த ஓட் டங்கள் 6 மட்டுமே. தொடர்ந்து களமிறங்கிய கலிஸ் அவுஸ்ரேலிய வீரர்களின் பந்தைச் சமாளிக்கமுடியாமல் திணறினார்.

ஸ்கோர் 45 ஐ எட்டியபோது அவர் மக்ராவின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்ட மிழந்தார். கலிஸ் 23 பந்துகளில் 1 பவுண்டரிக ளுடன் 8 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த லாறா ஸ்கோர் 50 ஆக இருந்தபோது ஓட்டமெதையும் பெறாமல் ஆட்ட மிழந்தார்.

பிறக்கனின் பந்துவீச்சில் சைமன்ஸிடம் பிடி கொடுத்து இவர் தனது விக்கெட்டைப் பறி கொடுக்க நேரிட்டது.

நிதானமாக ஆடிக்கொண்டிருந்த சங்ககார வுடன் மறுமுனையில் ராவிட் இணைந்துகொண் டார். ஆனால், இவரும் 14 பந்துகளைச் சந்தித்து 4 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

லீயின் பந்துவீச்சில் பொண்டிங்கிடம் பிடி கொடுத்து ட்ராவிட் ஆட்டமிழந்தபோது மொத்த ஓட்டம் 75 ஆக இருந்தது.

இதனையடுத்து களமிறங்கிய பீற்றர்சன் வட்சனின் பந்துவீச்சில் 2 ஓட்டங்களுடன் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தபோது உலக லெவன் அணி 82 ஓட்டங்களைப் பெற்றிருந் தது.

அடுத்து சங்ககாரவுடன் பிளின்ரொப் இணைந் தார். இவர்கள் இருவரும் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த வேளை அணி 101 ஓட்டங்களைப் பெற்றிருக் கையில் 94 பந்துகளில் 7 பவுண்டரிகள் அடங்க லாக 64 ஓட்டங்களைப் பெற்றிருந்த சங்ககார வட்சனின் பந்து வீச்சில் பொண்டிங்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து முரளிதரனுக்குப் பதிலாக களமிறக்கப்பட்ட அப்ரிடி 4 பந்துகளைச் சந்தித்து 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சைமன்ஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்ட மிழந்து வெளியேறினார். இதன்போது உலக லெவன் அணி 104 ஓட்டங்களைப் பெற்றிருந் தது.

அடுத்து பிளின்ரொப்புடன் - பொலக் கள மிறங்கினார். ஆனாலும், அவர் 12 பந்துகளில் 5 ஓட்டங்களைப் பெற்று ரன் அவுட்டாகி பவிலி யன் திரும்பினார். இதன்போது அணி 118 ஓட் டங்களைப் பெற்றிருந்தது.

இதனையடுத்து வெட்டோரி பிளின்ரொப் புடன் இணைந்தார். இவர்கள் சற்று நிதானத் துடன் விளையாடினர் எனினும் அணி 150 ஓட் டங்களைப் பெற்றிருக்கையில் 52 பந்துகளில் ஒரு சிக்சர் 2 பவுண்டரிகள் அடங்கலாக 38 ஓட் டங்களைப் பெற்றிருந்த பிளின்ரொப் - வட்சனின் பந்துவீச்சில் மக்ராவிடம் பிடிகொடுத்து ஆட்ட மிழந்தார்.

இதன்பின் வெட்டோரியுடன் சொகைப் அக் தர் இணைந்தார். எனினும் 28 பந்துகளில் 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த வெட்டோரி பிரட்லீ யின் பந்துவீச்சில் பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்ததால் உலக லெவன் அணி 41.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 162 ஓட்டங்களை மட்டுமே பெற்றதால் அவுஸ்ரேலிய அணி 93 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதில் 5 பந்துகளில் ஒரு சிக்சர் ஒரு பவுண் டரி அடங்கலாக 10 ஓட்டங்களைப் பெற்று சொகைப் அக்தர் ஆட்டமிழக்காமல் இருந்தார். உதிரிகளாக 8 ஓட்டங்கள் பெறப்பட்டது.

பந்துவீச்சில் வட்சன் 3, பிரட் லீ மற்றும் மக்ரா இருவரும் தலா 2, பிறக்கன் மற்றும் சைமன்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக் கெட்டைக் கைப்பற்றினர்.

நேற்றைய போட்டியின் ஆட்டநாயகனான வட்சன் தெரிவானார். இரண்டு அணிகளுக்கு மிடையிலான இரண்டாவது போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## சுப்ப சீரிஸ் ஆடுகளம்



மெல்பேர்ன் —

உலக லெவன் - ஆஸி அணிகள் மோதும் சுப்ப சீரிஸ் ஒரு நாள் போட்டிக்கான ஆடுகளம் பிரத்தியேக 'இக்ளு' வசதியில் பராமரிக்கப்பட்டுவருகிறது. நியூஸிலாந்து தொழில்நுட்பத்தின்படி சூரிய ஒளியை பயன்படுத்தி வெப்பம் ஏற்படுத்தப்படும்.

இதில் சூரிய ஒளியில் எரியும் விளக்குகள் உண்டு. காற்றுப் போக வசதியும் உண்டு. ஆடுகளத்தை மூடிவைக்கும்போது தட்ப வெப்ப நிலையால் பாதிப்பு ஏற்படாது. குளிர்ந்த நிலைமை இருந் தாலும் தேவையான வெப்பம் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

இதில் உள்ள தட்பவெப்ப கட்டுப்பாட்டு அமைப்பு சரியான நிலையில் வைத்திருக்கும். ஆடுகளம் பாதிப்பு ஏற்படாமல் பார்த் துக்கொள்ளும்.


27 மீற்றர் நீளம், 3.5 மீட்டர் அகலம் கொண்ட இந்த அமைப் பில் சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளதால் எங்கு வேண்டுமானா லும் எடுத்துச்செல்லலாம். இதனுள் 15 ஹீட்டர்கள், 18 புளோரசன்ட் விளக்குகள், எக்சாஸ்ட் பான் வெப்பத்தைக் குறைக்கும் வசதி, கணினி கட்டுப்பாட்டுமூலம் 30 டிகிரிவரை வெப்பம் தரலாம். சூரிய ஒளி இல்லாமல் புல் முளைக்காத இடத்தில் கூட இக்ளு பயன்படுத்தி புல் முளைக்க வைக் கலாம்.

JOHNNIE WALKER
SUPER SERIES
AUSTRALIA 2005


















# இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடுகள் அதிகம்!

யாழ்ப்பாணம்—

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணஅலுவலகத்திலேயே கடந்த மாதம் மிகவும் அதிகமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட் டுள்ளன.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கிளை அலுவலகங்கள் ஒவ்வொரு மாவட்டம் தோறும் நிறுவப்பட்டுள்ள போதும் கடந்த மாதம் யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் 414 முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் மூலம் அண்மைக்காலமாக யாழ். குடா நாட்டில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகமாக இடம் பெறுகின்றன என்பதை உணர்ந்து கொள்ள முடிவதுடன், தம்மிடம் முறைப்பாடு செய்யப்பட்ட அனைத்து முறைப்பாடுகளையும் விசாரித்து, நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் சில முறைப்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் யாழ். மனித உரிமை ஆணைக்குழு இணைப்பதிகாரி றோகித பிரியதர்சன தெரிவித்துள்ளார்.



சங்கானை—

ஓய்வுபெற்ற தென்னிந்திய திருச்சபைப் பேராயர் எஸ்.ஜெபநேசன் அடிகளாரைக் கௌரவித்து, சங்கானை தென்னிந்தியத் திருச்சபையால் நடத்தப்பட்ட பாராட்டு விழாவின்போது, சபை உறுப்பினர் எஸ்.தேவரஞ்சன் மோதிரம் அணிவிப்பதைக் காணலாம். (48)

# சாவகச்சேரி நகரசபை சூழல்பாதுகாப்பு பணிகள்

சாவகச்சேரி—

சாவகச்சேரி நகரசபை சுற்றுச்சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு, சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு சுற்றுச் சூழல் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

கடந்த 29 ஆம் திகதி நகரசபை எல்லைக்குட்பட்ட ஏ9 வீதியில் மீசாலையிலிருந்து சாவகச்சேரி நகரம் வரையிலான பகுதியில் பொலித்தீன் கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டுள்ளன. மறுநாள் நகரில் பொது மலசலகூடங்களில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலாம் திகதி முதல் நேற்று வரை வாய்க்கால்களை திருத்தல், சேதமடைந்த கட்டடங்களை அகற்றுதல், வளர்ப்பு நாய்களுக்கு பதிவு அட்டைகளும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பொதுச் சந்தையிலும், நகரின் கடை ஓரங்களிலும் போடப்பட்டிருந்த கழிவுப் பொருட்களும் அகற்றப்பட்டன.

இன்று நகரப்பகுதியில் சுற்றுச் சூழலை மேம்படுத்தும் நோக்குடன் நோய்த் தடுப்பு தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்படவுள்ளதுடன், மாநகரசபைக்குட்பட்ட பகுதிகளில் மரநடுகையில் ஈடுபடவுள்ளதாகவும், நாளை கழிவுநீர் வாய்க்கால்களில் துப்புரவுப் பணிகள் மேற்கொள்வது டன், மறுநாள் நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் அகற்றுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## நல்லூர் பிரதேச சபை பிரிவில்

# 10 சனசமூக நிலையங்கள் சிறந்தவையெனத் தெரிவு

யாழ்ப்பாணம்—

2005 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்ட உள்ளூராட்சி வாரத்தையொட்டி நல்லூர் பிரதேசசபை பிரிவில் நடந்த சிறந்த சனசமூக நிலையங்களைத் தெரிவு செய்யும் போட்டியில் 10 சனசமூக நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற சனசமூக நிலையங்களுக்கு கேடயமும், சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளதுடன், நான்கு தொடக்கம் பத்தாவது இடம்வரை பெற்ற சனசமூக நிலையங்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இவற்றுள் 1ஆம் இடம்- கோண்டாவில் ஞானவீரா சனசமூக நிலையம், 2 ஆம் இடம் - கோண்டாவில் கணேசா சனசமூக நிலையம், 3ஆம் இடம் - கோண்டாவில் வாகீஸ்வரி சனசமூக நிலையம் ஆகியவற்றுடன் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம், கோண்டாவில் நாராயணா சனசமூக நிலையம், கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம், கொக்குவில் பூநாறி வீதி கலை வர்ணி சனசமூக நிலையம், கொக்குவில் காந்திஜி சனசமூக நிலையம், கொக்குவில் மத்தி சனசமூக நிலையம், அரியாலை ஜெயபாரதி சனசமூக நிலையம் என்பன நான்கு தொடக்கம் பத்தாம் இடம் வரை பெற்ற சனசமூக நிலையங்கள் என நல்லூர் பிரதேச சபைச் செயலர் தெரிவித்தார். (63)

# பதிவாளர் திணைக்களத்துக்கு ஐந்து தமிழர்கள் தெரிவாகினர்

யாழ்ப்பாணம்—

பதிவாளர் திணைக்களத்தால் பதிவாளர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகள் பெற்று 05 தமிழர்கள், பதிவாளர் சேவைக்கு தெரிவாகியுள்ளனர்.

பதிவாளர் சேவை தரம் IIக்குத் தெரிவு செய்யப்பட்ட இந்த ஐவரும் பயிற்சியின் பின்னர் தற்போது வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த பதிவகங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

பதிவாளர் சேவை தரம் IIக்கு தெரிவாகியவர்களின் பெயரும் அவர்கள் நியமனம் பெற்றுள்ள பதிவகங்களின் விபரமும் வருமாறு:

சரஸ்வதி தியாகராஜா - பருத்தித்துறை, வ.பிரபாகர் - யாழ்ப்பாணம், க.நடராசா - கிளிநொச்சி, ஆனந்தி ஜெயரட்ணம் - வவுனியா, க.திருவருள் - மட்டக்களப்பு.

பதிவாளர் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இந்தப் போட்டிப் பரீட்சையில் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்று மொத்தம் 11 பேர் பதிவாளர் சேவைக்கு தெரிவாகி உள்ளனர்.

இதில் 6பேர் சிங்களவர், ஐவர் தமிழர். பதிவாளர் சேவைக்கு இந்த முறை அதிகளவில் தமிழர்கள் தெரிவாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆங்கில வகுப்பு

வட்டுக்கோட்டை—

வட்டு. லயன்ஸ் கழகத்தால் சனி, ஞாயிறு தினங்களில் மாலை நேரத்தில் இலவச ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றது.

வட்டு. லயன்ஸ் கழக அலுவலகத்தில் நடைபெற்றுவரும் இந்த வகுப்புக்களை வசதி குறைந்த மாணவர்களுக்கும், வயோதிபர்களுக்கும் நன்மையடைந்து வருகின்றனர்.

# நாவலர் தினம்

கைதடி—

கைதடி இணுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோயில் ஆதீனமும், கைதடி சைவ ஐக்கிய சங்கமும் இணைந்து நடத்தும் நாவலர் விழா எதிர்வரும் 24ஆம் திகதி பிற்பகல் 3மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் கிராம அலுவலர் சு.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நாவலர் படம் ஊர்வலமாக எடுத்து வரப்படுவதோடு, போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படும். (24)

# காலங் கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகளை பிரதி செவ்வாய் தோறும் மேற்கொள்ளலாம்


யாழ்ப்பாணம்—

காலங்கடந்த பிறப்பு, இறப்புகளைப் பதிவு செய்ய பிரதி செவ்வாய்க் கிழமை தோறும் காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை வடக்கு வலய உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் சதாசிவ ஐயர் தெரிவித்தார்.

காலம் கடந்த பிறப்பு, இறப்பைப் பதிவு செய்தல் தொடர்பான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க மக்கள் பல தடவைகள் அலைந்து கஷ்டப்படுவதையும், காலதாமதத்தையும் தவிர்க்கும் வகையிலேயே இத்திட்டம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இத்திட்டம் முன்பு ஆரம்பிக்கப்பட்டபோதும் இடையில் நிறுத்தப்பட்டிருந்தது. மீளவும் இத்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தச் சேவை ஆரம்பிக்கப்பட்டதும் சமர்ப்பிக்கப்படும் ஆவணங்கள் நேரடியாகப் பரிசீலிக்கப்பட்டு பாரமெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே இதன்போது மக்கள் உரிய ஆவணங்கள் மற்றும் அதன் போட்டோ பிரதிகள் என்பனவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும். காலங் கடந்த பிறப்பைப் பதிவு செய்தல் தொடர்பில் தாய், தந்தை, பிள்ளைகள் ஆகிய மூவரும் சமுகமளிக்க வேண்டும் எனவும் உதவிப் பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.



யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் தற்காலிகமாகக் கடமையாற்றிய ஊழியர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இந்தக் கல்லூரி அதிபர் ந.யோகராஜாவிடம் இருந்து போதனாசிரியர் ஒருவர் நியமனக் கடிதத்தைப் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.

# கிராம எழுச்சி திட்டத்தின் கீழ் 15 வேலைத் திட்டங்கள்

சுதுமலை—

சமுர்த்தி கிராம எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் 15 வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் 4 பொதுக் கிணறுகள் திருத்தம் செய்தல், 7 கிணறுகள் துப்புரவு செய்தல், மிகுதி 4 விவசாய வீதிகள் புனரமைத்தல் ஆகியன அடங்கும்.

இந்த வேலைத் திட்டங்கள் அனைத்தும் இந்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக செய்து முடிக்கப்படல் வேண்டும் என சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (44)

# பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம்

சுதுமலை—

வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

பாடசாலை அதிபர் க.ஞானசோதியன் தலைமையில் பாடசாலையின் நூல் நிலையத்தில் நடைபெற்ற இந்த அங்குரார்ப்பண நிகழ்வில் பாடசாலையின் பழைய மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக பாடசாலை அதிபர் தி.இ.ஞானசோதியன், உபதலைவராக கு.கங்கைவேணியன், செயலாளராக ஞா.செந்தமிழ்ச் செல்வன், உப செயலாளராக சி.யோகேஸ்வரன், பொருளாளராக ஆசிரியை தி.ஜெயகௌரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுடன் மேலும் 9 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (44)

# சக்கர நாற்காலி அன்பளிப்பு

சாவகச்சேரி—

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் சக்கர நாற்காலி, நாற்காலி என்பவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இதனை அவர் வைத்திய அதிகாரி க.அம்பிகைபாகனிடம் கையளித்தார். (29)



மானிப்பாய்

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் முன்பள்ளிச் சிறார்களுக்கான "செல்லம்மா" மழலைக் கவிதைகள் நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி. இராதாகிருஷ்ணன், முன்பள்ளி ஆசிரியை ஒருவருக்கு சிறப்புப் பிரதியை வழங்குவதையும், நிகழ்வில் கலந்து கொண்ட முன்பள்ளி ஆசிரியர்கள், சிறார்கள் மற்றும் பெற்றோர்களையும் படத்தில் காணலாம் . (100)

# தொழில் மலர்

## வடக்கு - கிழக்கு மக்களின் பொருளாதார நிலைமையை மாற்றக்கூடிய கடல் வளம்




பகுதி - II

கடந்த ஆண்டின் இறுதியில் ஏற்பட்ட சுனாமி அலைத்தாக்கம், வடக்கு - கிழக்குப் பகுதிகளையும், கடல் உபகரணங்கள் பலவற்றையும் பாதித்துள்ளது. இதனை மறு சீரமைப்பதுடன், தொழில் நுட்பம்சார் நவீன சாதனங்களாக உருவாக்கப்படவேண் டும்.

இதனூடாகவே பொருளாதாரத்தில் நவீன தொழில்முறைப் போட்டியுடன் நாம் உலக சந்தையினுள் பிரவேசிக்க முடியும்.

பாரிய கடல் கலங்களை நம் பிரதேசத்தில் மீனவர்கள் பயன்படுத்தாததுடன், பாரிய கடல் மீன்பிடித்தொழிலிலும் வரையறுக்கப்பட்ட அளவே நடைபெறுகிறது. ஆனால் அயல் மற்றும்அன்னிய நாட்டு கடல் அத்துமீறல்கள் தமிழரின் கடல் பகுதியில் இடம் பெறவேசெய்கிறது. இதற்கு உதாரணமாக - நம் நாட்டுச் சிறைகளில் வாழும் இந்திய மற்றும் பிற நாட்டு மீனவர்களைக் குறிப்பிடலாம். ஆனால் இது எமது சொத்துக்கள் என்பதும் இதனை சுரண்ட வாய்ப்புக்கள் வழங்காது தடுப்பது சம்பந்தப்பட்ட தரப்பின் பொறுப்பாகவும் காணப்படுகின்றது.

இதனைப் போலவே இயற்கை எமக்கு அளித்த கொடைகளில் ஒன்று கடல் வளத்துடன் ஒருங்கே அமைந்த இயற்கைத் துறைமுகமாகும்.

இது இலங்கையில் காணப்படும் தமிழர் வாழும் பிரதேசத்தில் காணப்படும் துறைமுகமாக காணப்படுவதுடன் அதிக முக்கியத்துவமும் பெறுகிறது.

ஆனால் ஏனைய எமது கடல் வளப் பிரயோசனங்களில் காணப்படும் - யாழ்ப்பாணம், மன்னார் போன்ற துறைமுகங்கள் திட்டமிட்ட அடிப்படையில் புறக்கணிக்கப்பட்டது போல் ஒரு நிலைமை திருகோணமலைப் பகுதிக்கு ஏற்படவில்லை. அதேபோல் ஏனைய துறைமுகங்களும் அதாவது, வடக்கு - கிழக்குப் பகுதியில் காணப்படும் காங்கேசன்துறை துறைமுகம், மன்னார் துறைமுகம் போன்றவை மறு சீரமைப்பு செய்யப்படுவதனூடாக யுத்த இழப்புக்களில் இரு ந்து வடக்கு - கிழக்குப் பகுதி மாற்றமடைய வாய்ப்பாக உருவாகுவதுடன் வேறு பல நன்மைகளையும் பெற்றுக் கொள்ளலாம். உதாரணமாக - நாம் இந்தியாவில் இருந்து பொருட்களை கடல் வழியாக பரிமாறும்போது அண்மையில் உள்ள மன்னார் துறைமுகத்தைப் பயன்படுத்தலாம். இதனூடாக குறைந்து செலவுடன் பொருட்களை பெற்றுக் கொள்ள வாய்ப்பாவதுடன், வடக்கு - கிழக்கு பகுதித் தமிழர்கள் தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளவும் வாய்ப்பாக அமையும் என்பது எதிர்கால செயற்பாட்டிலேயே தங்கியுள்ளது.

பெற்றோலியப் பொருட்களின் தற்போதைய அதிகரித்த பாவனையால் பெற்றோலிய எண்ணெய்கள், சடுதியான விலை வளர்ச்சியை அண்மைக் காலங்களாகப் பதிவு செய்தே வந்துள்ளது.

இதற்கு மாற்றுக் கருத்து காணப்படாதபோது வடக்கு - கிழக்குப் பகுதிக் கடல் பிரதேசத்தில் கனிய எண்ணெய்யான பெற்றோலியப் பொருட்கள் காணப்படுவதாக எமக்கு கடந்த கால ஆய்வுகள் நினைவூட்டியதுடன், இது கடலில் காணப்படுவதினால் அதிநவீன தொழில்நுட்பம் கொண்டு எடுப்பதற்கு முயற்சிகளை சர்வதேச நாடுகளுடன் சேர்ந்து இலங்கை அரசு முயற்சித்தது.

இது தமிழர் வாழும் பகுதியில் காணப்படுவதால் தமிழருக்கு ஒரு அரிய வாய்ப்பாக காணப்படுகிறது இதனூடாகத் தமிழர்கள் பலருக்கு வேலைவாய்ப்பு உருவாக வாய்ப்பாவதுடன் பொருளாதாரத்தின் சொத்தாகவும் விளங்கும்.

இவ்வாறு வடக்கு - கிழக்குப் பகுதிக் கடல் வளமானது - இலங்கையின் ஏனைய பகுதிக் கடல் வளத்தில் காணமுடியாத தன்மைகளைக் கொண்டுள்ளது.

இதனால் இங்கும் வாழும் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியான நன்மைகளை பெறுவதற்கு இதனுடன் இணைந்த பொருளா தாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்துடன் அதிநவீன தொழில்நுட்ப முயற்சிகளையும் இவற்றுடன் இணைத்துப் பொருளாதார நன்மைகளை மேலும் அதிகரித்துக் கொள்ளலாம். ✳

## சுயதொழில் ஊக்குவிப்புப் பயிற்சியும் தொழில்சார் உபகரணம் வழங்கலும்

### தெல்லிப்பழைப் பிரதேசச் செயலாளர் சு.முரளிதரனோடு ஒரு நேர்காணல்...



எமது நாட்டில் குறிப்பாக எமது பிரதேசத்தில் அதிகமானோர் அரசாங்க தொழிலினை நம்பி காலங்காலமாக காத்திருப்பதற்குக் காரணம் எமது கல்வியியல் முறைமையேயாகும். பாடசாலைக் கல்வியியல் கலைத்திட்ட முறைமையில் இருந்து, பல்கலைக்கழகத் துறைசார் பாடத்திட்டம் வரை நோக்கும் போது, ஒருவரை சுயமாக முன்னேற்றும் தொழில்சார் எண்ணக்கரு பொதிந்துள்ளதா? என்றால் அது கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கிறது. வளர்முக நாடுகளின் கல்விக் கலைத்திட்ட அம்சங்களை எடுத்து நோக்கினால், தரம் எட்டுவரை அடிப்படைக் கல்வி போதிக்கப்படும். பின்பு அவரவர் ஆற்றலுக்கும், விருப்பத்துக்கும் அமைவாக தொழில் விருத்தி எண்ணக்கருவினை மைய மாகக் கொண்ட கல்வி இடம்பெறும். இத னால் தான் அந்த நாடுகள் அபிவிருத்தி அடைந்த நாடுகளாக மாறின. ஆனால் எமது கல்வி முறைமை அப்படி அல்ல. "பல்கலைக்கழகம் சென்றவன் மாத்திரமே படித்தவன்" என்கின்ற எண்ணம் புரை யோடிக்கிடக்கிறது. பல்கலைக்கழகப் பாடத்துறைகளும் தொழில் விருத்தி ரீதியாக பெரிதாக முன்னேறவில்லை. இப்படியான நிலையில் எமது சமூக இளைஞர்கள் மத்தியில் தொழில் விருத்தி ஊக்கு விப்புகளை முன்னெடுக்க வேண்டும் என்கின்ற அரசின் திட்டத்துக்கமைய உங்கள் பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படும் தொழில்விருத்தி செயன்முறை பற்றி எமது தொழில் மலர் வாசகரோடு பகிர்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். உங்கள் தொழில் விருத்தி செயற்திட்டம் பற்றி விரிவாகக் கூறுங்கள்.

அரசின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் முன்னெடுக்கப்படும் இந்தத் தொழிற்பயிற்சி செயற்திட்டம் - இரண்டு பயிற்சித்திட்டங்களை உள்ளடக்கியுள்ளது.

1. வயறிங் (வீட்டு மின்சுற்று)
2. பிளம்பிங் (நீர் குழாய்கள் பொருத்துதல்)

இந்தப் பயிற்சித் திட்டங்களில் "வயறிங்" எனும் பயிற்சிக்கு 40 பயிற்சியாளர்கள் உள்வாங்க உள்ளனர். இது ஆறுமாத காலப்பயிற்சியாகும். பயிற்சி முடிவில் தொழிலை முன்னெடுக்கத் தேவையான உபகரணங்களும் வழங்கப்படும்.

"பிளம்பிங்" எனப்படும் நீர்க் குழாய் பொருத்துதல் 3 மாத கால பயிற்சி வகுப்பாகும். இதற்காக 20 பயிற்சியாளர்கள் உள்வாங்க உள்ளனர். இந்தப் பயிற்சி முடிவிலும் தொழிலை முன்னெடுக்கத் தேவையான உபகரணங்கள் வழங்கப்படும்.

இந்த இரு பயிற்சிகளும் திங்கள் முதல் வெள்ளி வரை தெல்லிப் பழைப் பிரதேச செயலக கட்டடத் தொகுதியில் நடைபெறும். பயிற்சிக் காலத்தில் 3500/- கொடுப்பனவு வழங்கப்படும். இதற்கான விண்ணப்பதாரிகள் எமது பிரதேச செயலகத்துக்கு உட்பட்டவர்களாக இருக்கத் தேவையில்லை. ஆனால், தூர இடமானால் போக்குவரத்துக் காரணங்களால் வரவு பாதிக்கப் படக்கூடாது.

**இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதிகள், சான்றிதழின் பெறுமதிகள் பற்றிக் கூறுங்கள்.**

இந்தப் பயிற்சி நெறிக்கானவிண்ணப்ப முடிவுத்திகதி இந்த மாதம் 15ஆம் திகதி என அறிவிக்கப்பட்டது. ஆனால், போதியளவு விண்ணப்பங்கள் இதுவரை வந்து சேரவில்லை. அதனால் விண்ணப்பங்கள் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளப்படும். பயிற்சி முடிவில் வழங்கப்படும் சான்றிதழ்கள் அமைச்சின் சான்றிதழ்கள் என்பதால், சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் தனித்துவம் வாய்ந்தது.

இந்தப் பயிற்சிக்கு 8 ஆம் தரம் வரையிலான கல்வித் தகுதியே எதிர்பார்க்கின்றேன். முக்கியமாக இதில் தொழில்துறைசார் ஈடுபாட்டோடு கூடிய அக்கறையே தேவை.

தொழில்சார் வழிகாட்டல்கள் இன்றி இருக்கும் எமது சமூகத்து இளைஞர்களின் நன்மை கருதி முன் எடுக்கப்படும் எமது தொழிற்பயிற்சியை மக்கள் மத்தியில் அறிமுகப் படுத்தும் மிக உன்னதமான சேவையை ஆற்றும் நமது ஈழநாட்டு நிறுவனத்துக்கு எமது செயலகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ✪

**நேர்காணல்: ஆர்.கே.மேனன்**

## இது பற்றிச் சிந்திப்போம்...!

மனுத்தன்மை எனும்
மகத்துவத்தை இழந்துவிட்ட
எம்மில் பலர் ஆஸ்திக்கும்
அந்தஸ்துக்கும் ஆயிர ம்
அர்த்தங்கள் தேடுகின்றனர்.

## பிரதேச செயலகங்களிற் கூடான வெளிநாட்டு நிறுவனங்களின் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் திட்டம்

பொது மக்களின் சுய தொழிலை ஊக்குவிக்கும் முகமாக, வெளிநாட்டு நிறுவனங்களான U.N.H.C.R, U.N.D.P போன்ற நிறுவனங்கள் பிரதேச செயலகங்களூடாக கடனுதவியை வழங்கி வருகின்றன.



இந்தத்திட்டத்தின் அடிப்படையில் சுய தொழில் முன்னெடுப்புக்கான கடனைப் பெறவிரும்புவோர் தங்கள் கிராமங்களிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்கள், நலன் புரிச்சங்கங்கள், மாதர் சங்கங்களை நாடி பதிவு செய்ய வேண்டும். இந்தச் சங்கங்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையான கடனாளிகளைச் சேர்த்து, பிரதேச சபைகளிடமிருந்து கடனைப் பெற்று இந்தச் செயற்பாட்டை கடனாளிகள் மூலம் முன்னெடுப்பர். இந்தச் செயற்பாட்டை முன்னெடுக்கும் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இந்தச் சுயதொழில் ஊக்குவிப்புக்கான கடனைப் பெறும் போதே இந்தக் கடனை அடைக்க வேண்டிய கால எல்லை அறிவுறுத்தப்படும். இது கடனைப் பெறும் தொகை, முன்னெடுக்கும் தொழில்களைப் பொறுத்து வேறுபடும். இந்தக் கடனானது - சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக முன்னெடுக்கப்படுவதால், மிகக் குறைந்த வட்டி வீதமே அறவிடப்படும். இது சுயதொழில் ஊக்குவிப்பு எனும் கிராம முன்னேற்றத்திட்டத்தின் கீழ் அமைவதால், இந்தக் கடனுதவிக்கு அறவிடப்படும் வட்டி குறைந்த தொகையாகும். இது குறிப்பிட்ட அந்தந்த சங்கங்களின் நிர்வாகச் செலவுகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படும். கொடுக்கப்பட்ட கடனை மாத்திரமே பிரதேச செயலகங்கள் அறவிடும்.

ஒருவர் இந்தக் கடனைப் பெற்று, சரியான முறையில் தொழிலை முன்னெடுத்து, கடனைச் சீராக அடைக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட தொழிலை மேலும் விருத்தி செய்யவோ அல்லது புதியதொரு தொழிலைத் தொடங்கவோ மீண்டும் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும். ஆனால், இந்தக் கடனைப் பெறுவதற்கான அனுமதியை வழங்கும் அதிகாரம் பிரதேச செயலகங்களுக்கே உரித்தானது. இந்த அதிகாரம் குறிப்பிட்ட சங்கங்களுக்கு வழங்கப்படமாட்டாது.


இந்தத் திட்டத்துக்காக கடந்த புதன்கிழமை U.N.D.P மேலும் 2 லட்சம் ரூபாவை பிரதேச செயலகங்களுக்கு வழங்கியுள்ளது. ஆகவே, இந்தத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு சிறு தொழிலையும் சீராக முன்னெடுப்பின் வெற்றி கிடைக்கும் என்பதற்குச் சாதகமான அம்சங்கள் பல உண்டு.

**குறைந்தவட்டி வீதம் கடன் அடைப்பிற்கான கால நீடிப்பு**

இந்தக் கடனுக்கு வங்கி வைப்பு எதனையும் உறுதிப்படுத்தத் தேவையில்லை என பல சாதகமான அம்சங்கள் இருப்பதால், இந்தக் கடன் திட்டமானது தொழில்த் திறமை உள்ளோர்க்கு ஒரு வரப்பிரசாதமேயாகும். ✷

# குடா நாட்டில் கேள்விக்குள்ளாகி வரும் நிலத்தடி நீர்வளம்

நீர் - உயிரிகளின் தோற்றம் பரம்பலுக்கு காரணமான ஒரு பதார்த்தமாகும். சூரிய மண்டலத்தின் வேறு கிரகங்களில் அங்கிகள் இருக்கின்றனவா? என்பதைப் பரீட்சிக்க அங்கு நீர் உண்டா? என்பதையே அடிப்படையாகக் கொள்கின்றனர். பூமியின் முதலுயிரி நீரிலேயே தோன்றியது என்றும், காலப் போக்கில்




கூர்ப்பின் வாயிலாக அங்கிகள் தரையை நோக்கி இடம் பெயர்ந்தன என்பதும் விஞ்ஞான ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை. அங்கிகளின் உடற்திணிவில் பெரும் பங்கு வகிப்பது நீராகும். எந்த ஒரு அங்கியும் உணவின்றி நீண்ட நாள் வாழ முடியும். ஆனால் நீரின்றி சில நாட்களே வாழமுடியும்.

உலகின் மொத்தப் பரப்பில் 2/3 பங்கு நீரால் ஆனது. என்பதும் நாம் அனைவரும் அறிந்த விடயமே. அந்த நீரில் பெரும் பகுதி உவர் நீராகவும், உறைபனியாகவும் உள்ளது. மனித பயன்பாட்டுக்கு உகந்த நன்னீர் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது.

நன்னீர் எனும்போது உவர்த்தன்மை, அழுக்கு என்பன அற்ற சுத்தமான நீரையே குறிப்பிடப்படுகிறது. எனினும், நன்னீர் எனும்போது அந்நீர் எவ்வகை இயல்புகளை கொண்டிருக்க வேண்டும் என்பதை கீழ்வரும் அட்டவணை விளக்குகிறது.

| இயல்பு | அதி உச்ச ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவு | அதி உச்ச அனுமதிக்கக் கூடிய அளவு |
|---|---|---|
| PH | 7.0-8.5 | 6.5-9.0 |
| கலங்கல் தன்மை (Turbidity) | 2 | 8 |
| குளோரைட் (Chloride) | 200 | 1200 |
| மொத்தவன்மை (Total Hardness) | 250 | 600 |
| நுண்ணங்கி | | |
| a)E-Coli | Nill | Nill |
| b)Coliform | 10/100ml | 10/100ml |

உலகின் பிரதான நன்னீர் மூலம் மழையே. மழையின் விளைவாக உருவாகும் ஆறுகள், நீர்த்தேக்கங்கள், நிலத்தடி நீர் என்பன மனித தேவைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. இலங்கையை எடுத்துக் கொள்வோமானால் மேற்சொன்ன கட்டமைப்புகள் அனைத்தும் காணப்படுகின்றன. ஆனால், யாழ்.குடா நாடு தனியே நிலத்தடி நீரை மட்டும் கொண்ட பகுதியாகும்.

யாழ்.குடாநாடு உலர் வலய பகுதிக்குள் அடங்கும். மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டதும், தன்னகத்தே பல கடல்நீர் ஏரிகளைக் கொண்டதுமான சிறிய நிலப்பரப்பாகும். இதன் அடித்தளம் சுண்ணக் கற்பாறையாளானது. மழையை தவிர்த்து யாழ்.குடாநாட்டில் பிரதான நீர் மூலம் நிலத்தடி நீர்மட்டுமே. (நிலத்தின் மேலான சிறு குளங்களின் பங்கு மிகச் சிறியதாகும்)

**நிலத்தடி நீர் எவ்வாறு உருவாகிறது**

வருடாந்தம் ஏற்படும் மழை வீழ்ச்சியானது - தரையின் ஊடே ஊடுகடத்தப்பட்டு நிலத்தின் கீழ்ப் பகுதியிலுள்ள ஊடு புகவிடாத படையின் மீது தேக்கமடைவதன் காரணமாகவே ஏற்படுகிறது. யாழ்.குடா நாட்டைப் பொறுத்தவரை- ஒக்ரோபர் தொடக்கம் ஜனவரி வரையான மாதங்களே மழை பெறப்படும் மாதங்களாகும். மிகுதி மாதங்கள் வறட்சியானவை. இந்த மழை மூலமே நிலத்தடி நீர் பெருமளவில் உருவாகிறது.

நிலத்தடி நீரானது - ஒரு குவிவில்லை. அல்லது பிறை வடிவில் கரையை நோக்கிச் செல்கையில், ஒடுங்கியும் நடு பிரதேசத்தில் தடிப்பாகவும் காணப்படுகிறது. நன்னீரின் அடர்த்தி உவர் நீரிலும் குறைவாக இருப்பதால், ஒன்றுடன் ஒன்று கலக்காது உவர்நீர் பரப்பு காணப்படுவதால், நன்னீர் வில்லையின் கீழும், சுண்ணக்கற் பாறையின் கீழும் உவர் நிரம்பியுள்ளது. இதை நாம் எமது நேரடி அனுபவம் மூலமே உணர முடியும். சில இடங்களில் உள்ள கிணறுகளில் நீர் போதாது விடத்து, அல்லது நீரின் நிறம் அதிகமாக உள்ள போது (குறிப்பாக தென்மராட்சி) கிணற்றினுள் குழாய் இறுக்கி பாறைபடைக்கு கீழ் உள்ள நீர் மேற்கொண்டு வரப்படுகிறது.

இதன் போது உவர் தன்மையற்ற கிணறுகள் பல உவர்நீராக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பொதுவாக வருடாந்தம் நாம் நன்னீர் வில்லையில் இருந்து, நீர் அகற்றும் போது இழுக்கப்படும் நீர் மழை வீழ்ச்சியின் மூலம் ஈடுசெய்யப்படுகின்றது.

**அடுத்த மலரில் தொடரும்...**

V.ஜெயச்சந்திரன்.

நன்றி

பசுந் தோனக

# கோழி வளர்த்தல்

**அறிமுகம்**

வீடுகளில் ஓர் உபதொழிலாகவும் கோழி வளர்ப்பை மேற்கொள்ளலாம். முழு நேரத் தொழிலாகச் செய்வதன்மூலம் பெருமளவு இலாபத்தைப் பெறலாம். இந்தத் தொழில் முயற்சியாளரின் வருமானத்தை மட்டும் பெருக்கும் இயல்பு கொண்டதன்று. பிரதேச மக்களின் முட்டை, இறைச்சித் தேவையையும் பூர்த்தி செய்கிறது. மக்களுக்கு வேண்டிய சத்துணவை வழங்குகிறது. எனவே இந்தத்தொழில் தனக்கும், சமூகத்துக்கும் பயனளிக்கும் தொழிலாக விளங்குகிறது.

**சந்தை வாய்ப்பு:-** கோழி முட்டை, இறைச்சி ஆகியவற்றுக்கு எப்போதும் பற்றாக்குறையே நிலவுகிறது. இந்த உணவு வகைகள் பெருமளவுக்கு வெளிமாவட்டங்களிலிருந்தே தருவிக்கப்படுகின்றன. எனவே உள்ளூரில் இதற்குப் போதிய சந்தை வாய்ப்பு உண்டு.

**தொழில்நுட்பம்:-** இந்தத்தொழிலுக்கான ஆரம்ப அறிவையும், பயிற்சியையும் பெற்றுக் கொள்வது முக்கியமானதாகும். ஒழுங்கான பராமரிப்புத் திறன் அவசியமாகும். கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள அலுவலகங்கள் மூலம் வேண்டிய பயிற்சியைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மூலப் பொருட்கள்:-** கொள்வனவு செய்யப்பட்ட ஒரு நாள் குஞ்சுகள் அல்லது வீடுகளில் அடைவைத்துப் பெறப்பட்ட கோழிக் குஞ்சுகள்.

**உபகரணங்கள்:-** (50 முட்டைக் கோழிகள் வளர்ப் பதற்கானது) 150 சதுர அடி விஸ்தீரணங் கொண்ட கோழிக் கூடு. நீர் வடிகட்டும் கலன்கள் இரண்டு.



உணவு புகட்டும் கலன்கள் இரண்டு. கோழியின் பருவத்துக்கேற்ற தீவனம்.

**முதலீடு:-** ரூபா 12,000/=

**வருமானம்:-** ரூபா 2,600/=

**குறிப்பு:-** காணி, கட்டடத்துக்கான பெறுமதியோ, வாடகையோ முதலீட்டில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. முட்டைக் கோழி வளர்க்கும் காலத்தில் (வேறு கூட்டில்) இறைச்சிக் கோழி வளர்ப்பது தொடர்ச்சியான வருமானத்தைப் பெற்றுத்தரும். இறைச்சிக் கோழி 45 நாட்களிலேயே விற்பனைக்குத் தயாராகிவிடும். ஒரு நாட் குஞ்சு முட்டையிடுவதற்கு 6 மாதம் செல்லும்.

# மக்கள் வங்கியின் சுயதொழில் கடனுதவி திட்டம்

இந்த வங்கியின் கீழ் பின்வரும் கடனுதவித் திட்டங்கள் நடைமுறையில் இருக்கின்றன

- ☆ ரேபியா
- ☆ சிறிய நடுத்தர கைத் தொழில் (எஸ். எம்)
- ☆ ஆசிய அபிவிருத்தி வங்கி (ஏ.டி.பி)
- ☆ சுய கைத்தொழில் கடனுதவித்திட்டம்

இந்தக் கடன் திட்டமானது - பின்வரும் நோக்கங்களுக்காக வழங்கப்படும்.

- ♠ தையலும் ஆடைதயாரிப்பும்
- ♠ ரயர் திருத்தும் நிலையம்
- ♠ மேசன் வேலை
- ♠ சிகை அலங்கார நிலையம்
- ♠ தச்சு மர வேலை
- ♠ தும்புக் கைத்தொழில்
- ♠ செங்கல் உற்பத்தி
- ♠ மோட்டார், கார் பழுது பார்த்தல்
- ♠ சப்பாத்து உற்பத்தி ஓட்டுத் தொழில்
- ♠ வர்ணம் பூசுதல்
- ♠ சைக்கிள் திருத்துதல்
- ♠ மின்சாரப் பொருள் உற்பத்தி விற்பனை

**கடன் பெறுவோரது தகைமைகள்**

- ◆ இலங்கைப் பிரஜை
- ◆ வேலையற்றோர்
- ◆ பாடசாலையில் இருந்து வெளியேறியோர்
- ◆ 18-35 வயதுக்கும் இடைப்பட்டோர்
- ◆ ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் தொழில் பயின்றவர்.
- ◆ குறித்த தொழில் அனுபவ முடையவர்

**குறிப்பு:-** திறமை, அனுபவம் என்பன தகுந்த முறையில் அத்தாட்சிப் படுத்தவேண்டும்.

**கடன் தொகை**

ரூபா 10,000/ 30,000 / வரை கடன் பெறமுடியும். இதற்கு வட்டி 18% கடன் மீளளிப்புக் காலப்பகுதி ரூபா 10,000 ஆயின், 60 மாதமும் அதற்கு மேற்படின் 84 மாத மும் ஆகும்.

27 வயதுக்குக் குறைந்த வராயின் பெற்றோர் அல்லது குடும்பத்திலுள்ள ஒரு அங்கத்தவர் பிணையாளராக நிற்க வேண்டும். ரூபா 10,000 இற்கு மேல் கடன் எடுப்பவராயின், பெற்றோர் அல்லது பொறுப்பு வாய்ந்த பிணையாளர் வேண் டப்படுவதோடு நகரும் சொத்துக்களும் பிணையாக கொடுக்கப்படவேண்டும்.

# தரமான விதைகளை தேர்ந்தெடுத்தல்

விவசாயத்தில் நல்ல விளைச்சலைப் பெற அடிப்படை யாக அமைவது நல்ல விதைகள் தான். "உற்பத்தியைப் பெருக்க, பொறுக்கு விதைகளை உபயோகியுங்கள்" என்று விவசாயத்துறையிலேயே விளம்பரங்கள் செய்கிறார்கள். காய்கறிப் பயிர்களுக்கு இது பொருந்தும்.



போட்ட விதை முளைக்கு மென்பது உண்மையே. ஆனால் கேட்ட பலனைக் கொடுக்குமா என்றால் மௌனமாகத் தான் தலையசைக்க வேண்டியிருக்கும். பருவத்தில் பயிர் செய் என்பார்கள். பருவம் எப்படி முக்கியமோ அப்படித்தான் தரமான விதையும் முக்கியம். தரமற்ற விதைகள் முளைக்கும் ஓரளவு வளரும். ஆனால் அறுவடையின் போது காலை வாரிவிடும். தரமான விதைகள் திடமாகவும், பருமனாகவும், சீரான வடிவுடனும் இருக்கும். பருவம், விதை, மண் ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. எந்த மண்ணுக்கு எந்த விதை ஏற்றது? விதைக்கு ஏற்ற பருமன் எது? என்பதைக் கவனத்தில் கொண்டு காய்கறி செடிகளைப் பயிரிட வேண்டும். மிகச் சிறு வயதுள்ள செடிகளிலோ, வயதான செடிகளிலோ இருந்து சேகரிக்கப்படும் விதைகள் தரமானதாக இருக்காது. அவ்விதம் நன்கு பழுக்காத காயிலோ அல்லது நன்றாகக் கனிந்து அழுகிய பழத்திலோ இருந்து விதைகள் சேகரிப்பது கூடாது. சிலர் காய் நிலையில் பறித்து கிடங்கில் பழுக்க வைப்பார்கள். அவ்வாறு பழுக்க வைத்த விதைகள் நிச்சயம் தரமற்றதாக இருக்கும்.

விதை சேமிப்பதற்கு ஈரப்பதன் உள்ள இடம் உகந்ததல்ல. அதிக காற்றோட்டம் விதையின் தரத்தைப் பாதிக்கும். பூச்சி அரித்த விதைகளைப் பயன்படுத்தக் கூடாது. விதைகளைப் பொலித்தீன் பைகளில் இட்டு பத்திரப்படுத்த வேண்டும். விதைகளுடன் சாம்பல் கலந்து வைக்கலாம். தாய் செடி விரைவாகப் பூத்துக் காய்க்கிறதா என்பதைக் கண்டறிந்து, அதிலிருந்து விதைகளைத் தயார் செய்ய வேண்டும். காய்கறிச் செடிகள் ஆண்டுகளுக்கு மூன்று தடவைகள் பலன் தரும். முதல் பருவத்தில் நல்ல காய்ப்புள்ள செடிகள் எவை என்பதைத் தெரிவு செய்து, அந்தச் செடிகளில் இடைப்பட்ட காய்களிலிருந்து விதைகளைச் சேகரிக்க வேண்டும்.

கிராமப் புறங்களில் உள்ள மக்கள் கீரை, வெண்டி, கத்தரி, மிளகாய் போன்றவற்றின் விதைகளைத் தங்கள் தோட்டத்து காய்களிலிருந்தே சேர்த்து வைப்பார்கள். நீங்களும் அந்தப் பழக்கத்தை கைக்கொள்ளலாம். அன்றியும் தரமான விதைகளை அரச பண்ணையிலும், தனியார் பண்ணைகளிலும் பெறலாம்.

நீங்கள் வெண்டி, அவரை ஆகியவற்றின் காய்களை செடி, கொடிகளிலேயே நன்கு முதிர்ந்து நெற்று ஆகும்வரை விட்டு வைத்து, விதைகளைச் சேகரிக்கலாம். நெற்றுக்கள் தாமே வெடித்துச் சிதறும் முன்பு பக்குவ நிலையில் பறித்து வைக்க வேண்டும்.

கத்தரி, தக்காளி போன்றவை செடியிலேயே நன்கு பழுத்த பிறகு தான் அதிலிருந்து விதைகளை எடுக்க வேண்டும். பழ விதைகள் சேகரிக்கும் போது அதில் பழத்தின் சதைப் பற்று இருக்கக் கூடாது. சதைப் பிடிப்பு இருந்தால் எறும்புகளும், பூச்சிகளும் விதைகளை அரித்துவிடும். பழத்திலிருந்து பிரித்தெடுத்த விதைகள் நீர் விட்டுக் கழுவி, உலர்த்திய பின் சேகரிக்க வேண்டும்.

இவ்வாறான முறையில் சேகரிக்கப்பட்ட விதைகளைப் பயிரிடுவதன் மூலம், வெற்றிகரமான அறுவடையைப் பெறமுடியும். ☆

# மக்களுக்கான தற்காப்புப் பயிற்சி வன்னியில் பல இடங்களில் ஆரம்பம்

கிளிநொச்சி—

வன்னி பிரதேசத்தில் மக்களுக்கான தற்காப்புப் பயிற்சிகள் பரவலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.முதலில் பளைப் பிரதேசத்தில் ஆரம்பமான இந்த போர் பயிற்சிகள் தற்போது பரந்தன் பொது விளையாட்டரங்கு, சாந்தபுரம் மைதானம் உட்பட பலமைதானங்களில் நடைபெற்று வருகின்றன.

இந்தப் போர்ப்பயிற்சிகளில் 18 வயதுக்கும், 50 வயதுக்கும் இடைப்பட்ட ஆண், பெண் இருபாலாரும் மிக ஆர்வத்துடன் பங்குபற்றி வருகின்றனர்.

அத்துடன் சமகால மக்கள் எழுச்சிக் கருத்தரங்கு நிகழ்வுகளும் வன்னியில் இடம்பெற்று வருகின்றன. இந்தப் பயிற்சிகள் குறித்து இதில் தெளிவு படுத்தப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற அரச திணைக்கள ஊழியர்களுக்கான கருத்தமர்வில் கிளிநொச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், திருகோணமலை அரசியற் துறைப் பொறுப்பாளர் எழிலன் ஆகியோர் இந்தப் பயிற்சி குறித்து கருத்துரைகளை நிகழ்த்தினர்.

இந்தக் கருத்தமர்வில் தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் பூவண்ணன் உரையாற்றுகையில்- சமகால அரசியல் நிலைப்பாடு, போர்ப்பயிற்சிகளின் அவசியம் என்பன குறித்து வலியுறுத்தினார்.

## கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வைப்பகத்தின் சேமிப்புத் திட்டம்

கிளிநொச்சி—

கிளிநொச்சி மத்திய கல்லூரி வணிக மாணவர் மன்றத்தினரால் தமிழீழ வைப்பகத்தின் ஆதரவுடன் இடம்பெறும் மாதாந்த பரிசளிப்பு நிகழ்வு- கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது

வணிக மன்றத் தலைவர் திவாகரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தேசியக் கொடியை இசைவிழிவாணிபப் பொறுப்பாளர் மருதன் ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடியை அதிபர் ராஜமகேந்திரன் ஏற்றி வைத்தார்.

மங்கள விளக்கை புலிகளின் குரல் பொறுப்பாளர் தமிழின்பன், தமிழீழ வைப்பக மேலாளர் பாலகிருஸ்ணன், வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இந்த நிகழ்வில் வரவேற்புரையை கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவன் குவேந்திரன் நிகழ்த்தினார்-தலைமையுரையைத் தொடர்ந்து, சிறப்புரையை இசைவிழி வாணிப பெறுப்பாளர் மருதன், புலிகளின் குரல் பொறுப் பாளர் தமிழன்பன் ஆகியோர் நிகழ்த்தினர்.

மாணவர்கள் 3 பேர் சேர்ந்து இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு இவர்களுக்கிடையிலான வினாடிவினாப் போட்டியும் நடத்தப்பட்டு, அவர்களுக் கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

தெரிவு செய்யப்பட்ட 10 மாணவர்களுக்கு வைப்பகத்தில் சேமிப்புத் திட்டத்தின் கீழ் பண வைப்பும் செய்யப்பட்டது.

## வைப்பகக் கிளை திறப்பு

இராமநாதபுரம்—

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வணிக மாணவர் ஒன்றியத்தால் தமிழீழ வைப்பகக் கிளை ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்தக் கிளையில் 300 இற்கும் மேற்பட்ட மாணவர்கள், சிறுவர்கள் அமுதம் என்னும் சேமிப் புக் கணக்கில் தங்களை இணைத்துள்ளனர்.

இந்த வைப்பகக் கிளையினரால் மாதம் தோறும் அதிஸ்டசாலிகள் 10 பேர் தெரிவுசெய்யப் பட்டும் வருகின்றனர். (இ)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அகவொளி நிலையத்தினால் பயிற்சி

முல்லைத்தீவு—

அகவொளி நிலையத்தில் சுனாமி கடல் அனர்த்தத்தினால் உளவியல் ரீதியில் பாதிப்புற்ற மக்கள் மத்தியில் சென்று அவர்களின் மன நிலைகளை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கு உதவியான பயிற்சிகள் வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியில் துறவறசபையினரும் பொது நிலையினருமாக இணைந்து ஏறக்குறைய 160இற்கும் அதிகமானோர் பங்குபற்றினர்.

இந்தப் பயிற்சியாளர்கள் தொடர்ந்து பளை, சேரன்பற்று, மாசார், மருதங்கேணி, பருத்தித்துறை, மணற்காடு, முல்லைத்தீவு, செம்பியன்பற்று போன்ற இடங்களில் ஒரு மாத காலமாகப் பணியாற்றியுள்ளனர். இந்த நெறி மூலம் மக்கள் அவர்களை மகிழ்வுடன் வரவேற்று தங்கள் உள்ளக் குமுறல்களை எடுத்துக் கூறி விடுதலை பெறுவதற்கு வடிகாலாக இருந்தனர்.

இந்தப் பயிற்சி இளையோருக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடைபெற்றது. இதில் இளையோர் என்றால் யார்? அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? சமுதா யத்தில் அவர்கள் வகிக்குமிடம், அவர்களின் தேவைகள், அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள், சமுதாயத்தில் அவர்களுக்கு இருக்கின்ற பொறுப்புக்கள் என்பன பற்றிய அறிவுரைகளும், விழிப்புணர்வுகளும் வழங்கப் பட்டன.

பெற்றோரைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கான வழி காட்டல் கருத்தரங்குகள், மதச் சங்கத்தின் பணி, அவர்களே ஒரு மாதிரிக் கிராமம் என்பது பற்றிய விழிப்புணர்வும், ஆலோசனைகளும் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டன. சில கிராமங்களில் ஏற்கனவே செயற்பட்டு பின்னர் செயற்படாமல் இருந்த மாதர் சங்கம் புனரமைக்கப்பட்டு திறனுடன் செயற்பட ஆக்கமும் ஊக்கமும் அளிக்கப்பட்டது. சில கிராமங்களில் புதிதாக மாதர் சங்கங்கள் உருவாக்கப் பட்டு பிரதேச செயலகங்களில் பதியப்பட்டு இயங்கவைக்கப் பட்டன. மாதர் சங்கத்தி னூடாக பெண்களுக்கான தையல் பயிற்சி, முன்பள்ளி ஆசிரியர் பெற்றுக்கெள்ள வேண்டிய பயிற்சி, சிறு கைத்தொழில் பயிற்சி, மலசல கூடம், பொதுக் கிணறு, வீதிப் புனரமைப்பு, முன்பள்ளி சீராக சிறப்புடன் விளங்கவைக்கக்கூடிய விதமாக உருவாக்குதல் போன்ற இவ்வாறான செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

# தமிழீழ இளையோர் செயற்பாட்டு அமைப்பினரால் பாடசாலை மாணவரிடையே உதைபந்தாட்டப் போட்டி





வன்னிப் பிரதேசத் தில் பல பாடசாலை மாணவர்கள் பங்கு கொண்ட இந்தப் போட்டியில்- 13 வயதுப் பிரிவிலும், 15 வயதுப் பிரிவிலும் காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்கள் இறுதிச் சுற்றுப் போட்டிக்குத் தெரிவாகினர்.

இறுதி நிகழ்வுகள் கிளிநொச்சி சந்திரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை விளையாட்டு உத்தியோ கத்தர் சிவநேசன், ஜெயக்குமார் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ விளையாட்டு அபிவிருத்திச் சங்க செயலாளர் பரஞ்சோதி ஏற்றிவைத்தார். இளையோர் செயற்பாட்டுக் கொடியை இளையோர் செயற்பாட்டுப் பணிப்பாளர் விஜி ஏற்றி வைத்தார்.

கிளிநொச்சி—

வன்னிப் பிரதேசத்தில் தமிழீழ இளையோர் செயற்பாட்டு அமைப்பினரால் பாடசாலைகளுக்கிடையி லான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டி நடைபெற்று வருகிறது. 13,15 வயதுப்பிரிவினிணஇரண்டுபிரவு களாக நடைபெறும் உதை பந்தாட்டப் போட்டி களில் தெரிவுப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றன.

# காலச் சுவட்டில்...

## இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

**ஒக்ரோபர்-06**

1789 : பாரிசில் பசி ஊர்வலம் நடந்தது. பாண் வேண்டும் என்று கேட்ட ஊர்வலத்தில் சென்ற மக்களிடம் பாண் கிடைக்காவிடில் கேக்கைச் சாப்பிடுங்கள் என்று இராணி மேரி ஆண்டினாயிட் கூறினார்.

1860: இந்தியாவில் தற்போது நடைமுறையில் இருக்கும் இந்திய மீனல் கோட் (முயிஸ) சட்டமாக்கப்பட்டது. இந்தச் சட்ட மூலம் 1862 ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டது.

1906 : புகழ்பெற்ற ஓவியர் ரவி வர்மா மரணமடைந்தார்.

190 : ஓட்டோ மான் சாம்ராஜ்யத்தின் பகுதிகளான போஸ்னியாவையும், ஹெர்ஸ்க் கோவினையும் ஆஸ்திரியா - ஹங்கேரி கைப்பற்றிக் கொண்டது.

1915 : செர்வியா மீது ஒஸ்திரியா - ஜேர்மனி படையெடுத்தது.

1917 : ரஷ்யாவில் ஜோர்ஜியா மாநிலம் ஒரு தனி இராணுவத்தை ஏற்படுத்திக் கொண்டது.

1927 ; முதன்முதலாக முழு நீள பேசும் படமான ஜாஸ்சிங்கர் நியூயோர்க்க திரையரங்கு ஒன்றில் திரையிடப்பட்டது.

1935: எத்தியோப்பாவில் அடுவா என்னுமிடத்தை இத்தாலியப் படைகள் கைப்பற்றின.

1938: பாலஸ்தீனத்தில் பிரிட்டிஸ் படையினருடன் ஏற்பட்ட மோதலில் 60 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

1938: செங்கோஸ்லோவேகியாவைத் துண்டுபடுத்தும் நோக்கில், ஸ்லோவேகியாவுக்கு தன்னாட்சி வழங்கப்பட்டது. ஜோஸம் டிஸோ என்பவர் பிரதமராகப் பதவி ஏற்றார்.

1939: சமாதானமே தனது பிரதான நோக்கம் என்று ஹிட்லர் பெல்ஜியத்திடமும், நெதர்லாந்திடமும் தெரிவித்தார்.

1973: இஸ்ரேல் - அரபு நாடுகள் போர் ஆரம்பித்தது. வரலாற்றில் இது மமயாம் கிப்பூர் போர்டுடு எனக் குறிப்பிடப்படுகிறது. 25 ஆண்டு காலத்துள் நடந்த அரபு இஸ்ரேல் போர்களில் மிகப்பெரிய போர் இதுவாகும். ஐந்து முனைகளூடாக எகிப்து சூயஸ் கால்வாயைத் தாண்டியது. சூயஸ் மீது கட்டப்பட்ட பாலங்களைத் தகர்க்க முயன்ற இஸ்ரேலியப் போர் விமானங்கள் பதினொன்றை எகிப்து சுட்டு வீழ்த்தியது.

1976: தாய்லாந்தில் இராணுவப் புரட்சி ஏற்பட்டது. பிரதமர் செனி பிராமோஜ் பதவியில் இருந்து விரட்டப்பட்டார். அம்மிரல் சங்காட் சாலா வோயா ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். ஏராளமான மக்கள் சுட்டுக் கொல்லப் பட்டனர்.

1978: முதன் முதலாக ஒரு பெண் லண்டன் சுரங்கவழிப் புகையிரதத்தில் சாரதியாகப் பணிபுரியத் தொடங்கினார்.

1979: ரஷ்ய அதிபர் பிரஸ்னேவ் கிழக்கு ஜேர்மனியில் இருக்கும் தனது படையினரில் 20000 படையினரையும், 1000 கவச வண்டிகளையும் 1980ஆம் ஆண்டு திருப்பி அழைத்துக் கொள்வதாக அறிவித்தார்.

1979: புகழ்பெற்ற அமெரிக்கப் பெண் கவிஞர் எலிசபெத் பிஷப் மரணமடைந்தார்.

1981: எகிப்திய அதிபர் அன்வர் சதாத் கெய்ரோ அருகில் இராணுவ அணிவகுப்பைப் பார்வையிடும் போது, இராணுவ வீரனான முஸ்லீம் தீவிரவாதி ஒருவனால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1983: ரஷ்ய விண்கலத்தில் விண்வெளிக்குச் செல்ல இந்திய வீரர் ராகேஸ் சர்மா தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1984: முதன்முதலாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உப குழுவில் இலங்கைத் தமிழர் தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டது

1987: பிஜி குடியரசு நாடானதாக அறிவித்தது.

1993: சீனா அணு ஆயுத சோதனையை நடாத்தியது.

**தொகுப்பு- சந்துரு**

## விழி இதழ் வெளிவந்துள்ளது

இராமநாதபுரம் —

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் மாதாந்தம் வெளிவரும் சுகாதார வெளியீடான விழி இதழ் ஒக்ரோ பர் மாதத்திற்குரியது வெளிவந்துள்ளது.

இவ்விதழ், உடல் நிறை அதிகரிப்பும், உணவுபழக்கமும் எனும் தலைப்புச் செய்தியுடன், முறிவுகள், வேலைக்குச் செல்லும் தாயும், தாய்பால் ஊட்டலும், இளம் பருவத்தினரின் தூய்மையைப் பாதுகாத்துக் கொள்வோம். எனும் சுகாதாரம் சம்பந்தமான கட்டுரைகளுடனும், வாழ்க்கை ஒரு கேள்விக்குறி என்னும் சிறுகதையுடனும் வெளிவந்துள்ளது. (இ)

## வெதுப்பக உரிமையாளர்களுக்கான அடிப்படை விதிகள்

வெதுப்பகம் ஒன்றுக்கான உரிமத்தைப் பெற்றுக் கொள்வதற்கு இருக்க வேண்டிய அடிப்படை ஒழுங்கு விதிகளைத் தமிழீழ சுகாதார சேவையினர் வெளியிட்டுள்ளனர்.

இதில் முக்கியமாக வெதுப்பியின் நிறை 325கிராம் முதல் 355 கிராம் வரை இருக்க வேண்டும். வெதுப்பி நிலையம் சூழல் சுகாதார ரீதியில் பொருத்தமாக இருப்பதுடன், காற்றோட்டம், வெளிவசதி உடையதாக இருத்தல் வேண்டும் என்ற 17 அடிப்படை ஒழுங்கு விதிகள் அடங்கியுள்ளன.

நமது ஈழநாடு

வைர வரிகள்

அதிகாரம் வெகு சுலபமாகத் தனக்கொரு பெயரைச் சூட்டிக்கொள்ள முடியும். ஆனால் வெறும் பெயர், தனக்கோர் அதிகார சக்தியை அடைய முடியாது. - மாக்கியவெல்லி -

## நமது நோக்கு

### வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்திய காவிய நாயகர்கள் நினைவில்...!

அந்த வரலாற்றுத் துயரையும், அதே சமயம் வரலாற்றுத் திருப்பத்தையும் ஏற்படுத்திய சம்பவம் நிகழ்ந்து நேற்றுடன் 18 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டபோதிலும், தமிழ் மக்களின் நெஞ்சங்களை உலுக்கிய அந்த நிகழ்வின் அழுத்தங்களும், தாக்கங்களும் இன்னமும் அப்படியே ஆத்மாவின் ஆழத்தில் அதிர்வுகளை ஏற்படுத்திய வண்ணமே உள்ளது.

காந்திய தேசத்திலிருந்து இந்த மண்ணில் சாந்தி நிலவச்செய்ய வருகிறோம் - அமைதிக்காக வருகிறோம் என பீற்றிக்கொண்டு பல்லாயிரக்கணக்கில் ஆயுதபாணிகளாக கனரக இராணுவ சாதனங்களுடன் வடக்கு - கிழக்கில் வந்திறங்கிய அந்நிய - இந்திய - படையினர், பேரினவாத பௌத்த சிங்கள அரசின் அபிலாஷைகளுக்கேற்ப தமது தன்மையையும், தமது செயற்பாடுகளையும் மாற்றிக்கொண்டு, இந்தியாவின் பிராந்திய நலன்களைப் பேணவும், இந்து சமுத்திரப் பகுதியில் தமது மேலாதிக்கத்தை நிலை நாட்டவும், உறுதியான தளமாக எமது தாயக நிலப்பரப்பை மாற்றிக்கொள்ளவும், இலங்கையின் இனப்பிரச்சினையைப் பயன்படுத்திக்கொள்ள முயன்றதையடுத்தே, இந்த வரலாற்றுத் துயரங்களும், வரலாற்றுத் திருப்பமும் நிகழ்ந்தது.

வரலாற்றுக் காலம் முதற்கொண்டே, இந்தியாவுக்கும் ஈழத் தமிழர்களுக்குமான உறவு என்பது 'தொப்புள்கொடி' உறவாகவே பேணப்பட்டு வந்ததால், ஈழத் தமிழர்கள் இந்தியாவை - தங்களின் தாய் நாடான இலங்கையை விடவும், நேசித்தார்கள், மதித்தார்கள், நம்பவும் செய்தார்கள்.

தாங்கள் தங்கள் சொந்த மண்ணில் - வாழ் நிலத்தில்- வைத்தே பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சியாளர்களாலும், அவர்களின் ஆயுதப் படைகளாலும் இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதலே, பல்வேறு வழிகளிலும் அடக்கி ஒடுக்கி ஏதிலிகளாக்கப்பட்டு, அகதிகளாகத் துரத்தப்பட்ட வேளைகளில், எங்களுக்கு இந்தியா உதவும் - பாதுகாக்கும் - என நம்பியிருந்த தமிழ் மக்களை, நம்பவைத்து ஏமாற்றிய துரோகத்தனத்தை அம் மக்களால் இன்றும்தான் நம்பமுடியாமலுள்ளது.

அமைதி காக்கவென ஆயுதங்களுடன் வந்தவர்கள், அவ் ஆயுதங்களைத் தங்களை நோக்கியே குறி வைக்கும் உள் நோக்கத்துடன் இருந்தார்கள் என்பதை, அவர்களால் ஆரம்பத்தில் உணரவே முடியவில்லை.

ஆனாலும், தியாகி திலீபனின் தியாகச் சாவு ஒரு வரலாற்று உண்மையை எம் மக்களுக்குத் தெட்டத் தெளிவாக உணர்த்தியது. அதாவது, காந்திய தேசத்தவர்களுக்கு காந்திய வழியினை, சாத்வீகப் போராட்டத்தின் நியாயத் தன்மையை உணர்ந்துகொண்டு செயற்படும் தார்மீக சிந்தை கிடையவே கிடையாது என்பதே அதுவாகும்.

திலீப தீபம் அணைந்த இருள் விலக முன்னரே, மனரணம் ஆற முன்னரே குமரப்பா, புலேந்திரன் போன்ற பன்னிரு வேங்கைகள் சயனைட் உட்கொண்டு வீரச்சாவடையவும் இந்தியாவே காரணமானது, இந்தியா குறித்த மாயையை எமது மக்களிடமிருந்து முற்றாகவே விலக வைத்தது.

தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறு என்ற பழமொழியை இந்தியா நிஜமாக்கியது.

தமிழரின் நலன்பேண வந்தோர், அவர்களை யாரிடமிருந்து பாதுகாக்க வந்ததாக பறைதட்டிக் கொண்டார்களோ, அவர்களின் காவலராகவும், ஏவலாளராகவும் செயற்பட்ட 'துரோகம்' ஒரு வரலாற்றுப் பதிவாகியது. அதன் தாக்கம் ஏற்படுத்திய எதிரொலி அவர்களுக்கு ஒரு வரலாற்று அவமானத்தை ஏற்படுத்தும் போருக்கு வித்திட்டது.

இந்திய - ஈழ யுத்தம் தமிழ் மக்கள் விரும்பாத ஒன்றாக இருந்தபோதிலும், அது அவர்கள் மீது இந்தியாவினால் திணிக்கப்பட்டது.

வல்லரசுப் பலம்மிக்க இந்திய மேலாதிக்கம் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் இந்திய அரசின் ராஜதந்திரத்துக்குக் கிடைத்த தோல்வியாகும்.

ஜே.ஆரின் இராஜதந்திர சதி வியூகத்தினுள் இந்திய அரசு சிக்கியது இலங்கையின் பேரினவாதத்துக்குக் கிடைத்த பெரு வெற்றியாக அமைந்தது.

எல்லாவற்றையும்விட மிகப்பெரும் திட்டங்களுடன் ஜே.ஆரின் அழைப்பை ஏற்று, தமிழர் தாயகப் பகுதிக்குள் அணிவகுத்து இறங்கிய இந்திய இராணுவத்தை, கால எல்லை குறித்து பிறேமதாஸா வெளியேறச் சொன்னது இந்திய வல்லாதிக்கத்துக்கு ஏற்படுத்தப்பட்ட பெரும் அவமதிப்பாகும்.

ஆனாலும், இந்த வரலாற்று அனுபவத்தில் இருந்து இன்னமும் இந்தியா, இலங்கையின் பேரினவாத ஆட்சியாளர் குறித்து ஒரு தெளிவான கருத்து நிலைப்பாட்டை, நீதியின் - நியாயத்தின் பக்கம் நின்று எடுக்கவில்லை என்பதே கவலைக்குரிய விடயமாகும்.

ஆனாலும், திலீபன் தொடங்கி குமரப்பா, புலேந்திரன் என்ற பன்னிரு வேங்கைகளைத் தொடர்ந்து மேலாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடித் தம் இன்னுயிரை ஈய்ந்த மாவீரர்கள், எம் மக்களுக்குச் சொல்லிச் சென்றுள்ள செய்தி மகத்தானதொன்றாகும்.

'எங்களின் விடுதலையையும், சுதந்திரத்தையும் எமக்கு அயலாரோ, வேறு எவருமோ பெற்றுத் தருவார்கள் என ஒரு போதும் நம்பக்கூடாது. நாமே போராடி வெல்லவேண்டும், நாமே நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்...' என்பதே அந்தச் செய்தியாகும்.

நேற்றைய தினம் 'தீருவிலில்' ஏற்றப்பட்ட தீபங்களில் அந்தப் பன்னிரு வேங்கைகளின் விடுதலைத் தாகம் தணியாத, ஆனால் நம்பிக்கையும் உறுதியும் ஒளிரும் முகங்களை எம் மக்கள் இனங்கண்டே இருப்பார்கள்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




## 'ஊர்சுற்றி'யார் பார்வையில்...

# பேச்சு வார்த்தை - சமாதானம் என இனியும் பேசிப் பேசிப் பயனில்லை

பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குச் சமாதானத்தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை உமக்குக் கொஞ்சமாவது இருக்கிறதா? என்று கேட்டபடி வந்தார் நண்பர் பரமசிவம்.

சந்திரிகா அம்மையார் பிரான்சின் தலைநகர் பாரிஸில் போய்க் கூட பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகத் தான் எடுத்து வரும் முயற்சிகள் பற்றிச் சொல்லியிருந்தும் கூட உமக்கு இப்படியொரு சந்தேகம் எழுந்திருக்கிறதே என்றேன்.

சந்திரிகா அம்மையார் மட்டுமல்ல. அம்மையாரின் அப்பன் பண்டார நாயக்காவும், அம்மா சிறிமா பண்டாரநாயக்காவும் கூட இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்பட வேண்டுமென்றுதான் சொல்லி வந்தார்கள். தகப்பன் பண்டாரநாயக்கா பேச்சு நடத்தினார். தந்தை செல்வநாயகத்துடன் ஓர் ஒப்பந்தமும் செய்தார். பேரினவாதிகளின் எதிர்ப்பினால் அந்த ஒப்பந்தத்தை அவரே கிழித்தும் எறிந்தார். இதன்பின் ஆட்சிக்கு வந்த சிறிமா அம்மையார் இந்த ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசுவதற்கே மறுத்தார். இனப்பிரச்சினை பற்றிப் பேசித் தீர்ப்போம் என்று தந்தை செல்வாவும் தமிழ் அரசுக் கட்சியினரும் சிறிமா அம்மாவை அழைத்த போது அவர் திரும்பியும் பார்க்காமல் குமாரசூரியரை அமைச்சராக நியமித்து அவர் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சித்தார். இலங்கையை ஒரு சோஷலிஸக்குடியரசாகப் பிரகடனம் செய்வதற்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணய சபை நியமிக்கப்பட்டது. இந்தச் சமயத்தில் தமிழ் மக்கள் சார்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சிப் பிரதிநிதிகள் அதிகாரத்தைப் பரவலாக்குவதற்கு சமஷ்டி முறையிலான அடிப்படைப் பிரேரணைகள் பலவற்றை அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பித்தனர். இதே சமயம் யாழ்ப்பாணத்திலிருந்த மதிப்புக்குரிய கம்யூனிஸ்ட் தலைவர் அ.வைத்திலிங்கம் தலைமையில் அறிவுஜீவிகள் சிலர் சிறிமா அம்மையாரைச் சந்தித்து இலங்கையைக் குடியரசாக்கும் புதிய அரசியலமைப்புடனேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் யோசனைகளை எடுத்துக்கூறினர். இந்தச் சமயத்தில் அரசியல் அமைப்புக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் கொல்வின் ஆர்.டி.சில்வாவை தூதுக் குழுவினருக்குப் பதிலளிக்கச் சொல்லிவிட்டு சிறிமா அம்மையார் மௌனமாக இருந்தார். கொல்வின் பேசி எதையும் ஏற்க முடியாதென நிராகரித்து வைத்திலிங்கம் தலைமையிலான தூதுக்குழுவை வெறும் கையுடன் திருப்பி அனுப்பினார். அந்த அருமையான சந்தர்ப்பத்தையும் சிறிமா அம்மையாரின் அரசு தவற விட்டது. இதன்பின் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வட்ட மேசை மாநாடு கூட்டிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதாகச் சொல்லி ஆட்சிக்கு வந்ததும் "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்று சொல்லிப் போரையே தூண்டிவிட்டு இன அழிப்பையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டார். பின்னர் சந்திரிகா அம்மையர் தம்மிடம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு இருப்பதாகச் சொன்னார். பேச்சு நடத்துவதற்கென்று சில அதிகாரிகளை அனுப்பினார். பின்னர் சந்திரிகா அம்மையார் வெளிநாட்டு ஆயுதங்களையும் படைச்சாதனங்களையும் வெளிநாட்டு இராணுவ மூளையையும் நம்பி சமாதானத்துக்கான போரை நடத்தினார். இன்று சந்திரிகா அம்மையாரும் சரி, இதற்கு முன்னும் இப்போதும்கூட சமாதானமென்றும், பேச்சுவார்த்தை என்றும் பேச்சுக்காகப் பேசுகிறார்களேயொழிய அதை நிறைவேற்ற வேண்டும் என்று மனப்பூர்வமாகச் செயல்பட்டதாக இல்லை. இப்பொழுது தென்னிலங்கை அரசியல்வாதிகளும் சரி, அவர்களுடைய ஊடகங்களும் சரி, விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்ட வேண்டுமென்றும், அன்ரன் பாலசிங்கத்தை பிரிட்டனிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்றும் புலிகளை ஐரோப்பிய நாடுகள் தடை செய்ய வேண்டுமென்றும் பிரசாரம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று எல்லோரும் பேச்சுக்குப் பேசுகிறார்களேயொழிய, பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று யாராவது உளப் பூர்வமாக விரும்பிச் செயல்படுகிறார்களா? இப்பொழுது ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்துக்கும் இது பயன்படுகிறது. அவ்வளவுதான் என்று பரமசிவம் சொன்னார்.

எங்கள் வழியை நாங்கள் ஒற்றுமையாகச் செயல்படுத்தப்பார்க்கவேண்டும். இனியும் நாம் பிரிந்து ஆளையாள் திட்டிக்கொண்டு, வீடு தீப்பற்றி எரியும் போது வீணை வாசித்துக் கொண்டிருந்தால், நாம் இருந்த இடமே தெரியாமல் அழிக்கப்பட்டுவிடுவோம் என்று நான் சொல்லி எழுந்தேன். நீர் சொல்வது முற்றிலும் சரி என்று நடந்தார் பரமசிவம்.

## முறை தவறக் கூடாது

வாசகர் நோக்கு

ஆசிரியர்களுக்குக் குறிப்பிட்ட அந்தந்தக் கல்வி வலயங்களால் "இடருதவிக்கடன்" என ரூபா 60,000/- வழங்கப்படுகிறது. இந்தக் கடனுதவி ஒழுங்கு முறைமைகளில் சில வலயங்கள் தவறிழைத்துள்ளதாக ஆதார பூர்வ உண்மைகள் நிரூபித்துள்ளன. இது தொடருமாயின் வலயங்களின் பெயர்கூறி ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கடனுதவி முன்னுரிமைக்கு சில நிபந்தனைகள் அறிக்கை வடிவத்தில் உள்ளன. குறிப்பிட்ட ஆசிரியரின் மேற்படிப்பு, சகோதரர் திருமணம் என இந்த நிபந்தனைகள் தவிர ஏனையவை படிவம் சமர்ப்பித்த ஒழுங்கு முறையில் வழங்கப்பட வேண்டும். ஆனால் ஒரு சில வலயங்களில் ஏதோ தமது சொந்தப் பணத்தைக் கொடுப்பது போன்று பாகுபாட்டின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. "இடருதவிக்கடன்" எனும் எண்ணக் கருவினை கெடுக்குமளவுக்கு தொழிற்படுகின்றனர்.

நியாயமான ஆளுமைகொண்ட அதிகாரிகள் என்பதால் தான் இவர்களிடம் அமைச்சு இந்தத் தெரிவுப்பொறுப்பினை வழங்கியுள்ளது. இதனைத் துஷ்பிரயோகப்படுத்தும் அதிகாரம் கணக்காளருக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ இல்லை. முறைகேடாக நடப்பின் தட்டிக் கேட்கும் அதிகாரம் ஆசிரியர்க்கே உண்டு. இப்படிப்பட்ட வேலைகளைச் செய்யும் அதிகாரிகள் இருப்பின் அவர்களை ஆதார பூர்வமாக நிரூபிக்கும் கடமை இதில் சம்பந்தப்பட்டவர்களுக்கு உண்டு. அந்த வகையில் கௌரவமற்ற மேற்படி செயற்பாடுகள் தொடரக்கூடாது.

யாழ்ப்பாணம்.

# ஆசிரிய தினமும் ஆசிரியர் உரிமையும்

“இன்று ஆசிரிய தினம் உலகளாவிய ரீதியில் நினைவுபடுத்தப்படுகிறது. இதனை முன்னிட்டு யாழ். மாவட்ட ஆசிரியர்கள் மத்தியில் ஐந்து கல்வி வலயங்களிலும் எழுமாற்றாகப் பத்து ஆசிரியர்களிடம் பேட்டி முறையிலும், தனிப்பட்ட கலந்துரையாடல் மற்றும் தனியாள் ஆய்வு அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவற்றின் தொகுப்பாக இந்தக் கட்டுரை அமைகிறது. இந்த ஆசிரியர்கள் தாங்கள் பணிபுரியும் இடம் அரச திணைக்களம் என்பதாலும், தனிப்பட்ட ரீதியில் கல்வி அதிகாரிகளால் பழி வாங்கப்படுபவர் என்பதாலும் தங்களுடைய பெயர் மற்றும் முகவரியை வெளிப்படையாகத் தெரியப்படுத்துவதை விரும்பாத காரணத்தால் இந்தக் கட்டுரைகளில் அந்த விபரங்கள் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**தொகுப்பு-யாழ். நிருபன்-**”




### கஷ்ட பிரதேச, அதிகஷ்டப்பிரதேச நிலைமை

யாழ்.மாவட்டத்தில் கல்வியில் மிகவும் அதிகஷ்டமான பிரதேசமாகவும், கஷ்டப்பிரதேசமாகவுள்ள குறிப்பிட்ட சில பிரதேசங்களான வடமராட்சி கிழக்கு, தீவகக் கல்வி வலயம் போன்றவற்றில் கடமை புரியும் ஆசிரியர்களைச் சந்தித்து கலந்துரையாடிய பொழுது அவர்கள் கூறியது “நாங்கள் கடந்த 10 வருடம், 5 வருடங்களுக்கு மேலாகக் கல்வி நிர்வாக அடிப்படையில் மிகவும் அதிகஷ்டப்பிரதேசம், கஷ்டப்பிரதேசங்களில் தொடர்ச்சியாக கடமையாற்றி வருகின்றோம். ஆனால் வீட்டுக்கு அருகில் குறித்த பல ஆசிரியர்கள் 20 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வருவது எமக்கு விசனத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

இதற்கு யாழ்.மாவட்ட கல்விப் பணிப்பாளர்கள் ஒழுங்குபடுத்தப்பட்ட வகையில் சில காலப்பகுதிக்கு ஆசிரியர்களை இடமாற்றம் செய்து சேவையில் ஈடுபட வைக்க வேண்டும் என, ஆதங்கத்தை வேதனையுடன் தெரிவித்தனர். இதனால், தமக்கு ஆசிரியத் தொழிலில் வெறுப்பு ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

அவர் தொடர்ந்து கூறுகையில்-

அரசாங்கம் கஷ்டப் பிரதேசம், அதிகஷ்டப் பிரதேசங்களுக்கு ஆசிரியரின் சேவையை ஊக்குவிக்கும் வகையில் கொடுப்பனவுகளை வழங்கும் என அறிவித்தும், இதுவரை இந்தக் கொடுப்பனவுகள் வழங்குவதில் இழுபறி ஏற்பட்டு இருப்பது தமக்கு பொருளாதார ரீதியில் ஏற்படும் பெரும் செலவை ஈடுசெய்ய முடியாது உள்ளதாகவும். இதனைத் தீர்க்க வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உடனடி நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர்.

தாங்கள் இந்தப் பிரதேசத்தில் பணிபுரிவதானால் தமது கல்வி மற்றும், வாண்மைத்துவ விருத்தியை தொடர்ச்சியாக மேற்கொள்வதில் பல பின்னடைவுகள் ஏற்படுவதாகவும், இதற்கு பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வி நிறுவகம் என்பன கற்கைநெறிகளை பயில்வதற்கு ஆட்சேர்ப்பு செய்யும் பொழுது தமது பிரதேசத்தில் கடமை புரிந்தோருக்கு விசேட புள்ளித் திட்டத்தை வழங்கி, முன்னுரிமை அளித்தல் மிகவும் அவசியமானது எனவும் சுட்டிக்காட்டினர்.

மேலும் தாம் தங்குவதற்கு வசதியான இருப்பிட வசதிகள் அரசினாலோ அல்லது ஏனையவர்களாலோ செய்து தரப்படுவதில்லை எனவும் குறிப்பிட்டனர்.

### ஆசிரிய நியமனமுறை

தற்போது ஆசிரியர் நியமனம் பெற்றவருடனும், ஏற்கனவே அண்மையில் நியமனம் பெற்றவர்களுடனும் கலந்துரையாடிய பொழுது நியமனம் வழங்குவதில் ஓர் ஒழுங்கான முறை கல்வி அதிகாரிகளினால் பின்பற்றப்படவில்லை எனவும், நியமனத்தின் போது ஆசிரியரின் சொந்த இடம், கடமை புரியும் இடம் பற்றிச் சிறிதேனும் சிந்திக்காமல் செயற்பட்டுள்ளனர் எனவும் குற்றம் சாட்டினர்.

இதற்கு எடுத்துக்காட்டாக வேலணையைச் சொந்த இடமாகக் கொண்ட ஒருவருக்கு வடமராட்சியில் உள்ள ஓர் பாடசாலையில் நியமனமும், அதே வேளை கரவெட்டியில் உள்ளவருக்கு வேலணையிலும் நியமனம் கொடுத்திருப்பது எந்த வகையில் பொருத்தப்பாடு உடையது என மிகவும் ஏளனமாகக் கூறினர். இதுகூடக் கல்வி அதிகாரிகளுக்குத் தெரியவில்லைப் போலும் எனக் கிண்டலாகப் பதிலளித்தார்.

### கல்வியியற் கல்லூரியில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள்

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் இதுவரை காலமும் - கல்வியியற் கல்லூரிகளில் டிப்ளோமாப் பட்டம் பெற்றவர்களுக்கு வெளிவாரி பட்டப் படிப்புகள் பிரிவில் முதல் வருட கற்கையை விதிவிலக்கு அளித்து இரண்டு வருட கற்கை நெறியை முடித்தவர்களுக்கு பட்டம் கொடுத்துவந்தமை யாவரும் அறிந்த விடயமே. பின்னர் புதிய இணைப்பாளர், துணைவேந்தர் பதவியேற்றதும் - முதல் இருந்த நடைமுறையை தாங்கள் ஏற்க முடியாது எனவும், இது சட்டத்துக்கு முரணானது எனக் கூறி, இனிவரும் காலங்களில் விதிவிலக்கு முறை வழங்கப்படாது என வாய்மொழியாகக் கூறியுள்ளதுடன், இறுதி வருட கற்கையைப் பூர்த்தி செய்தவர்கள் -முதல் வருட கற்கையைப் பூர்த்தி செய்தால் தான் பட்டச் சான்றிதழ் தர்ப்படும் எனவும் அறிவித்துள்ளமை, A/L பரீட்சை சித்தியடைந்த மாணவனை, O/L பரீட்சைக்குத் தோற்றும் படி அறிவிக்கும் செயற்பாடு என கல்வியியல்க் கல்லூரியில் டிப்ளோமா பட்டம் பெற்ற ஆசிரியர் குறிப்பிட்டார்.

மேலும், இந்த முறையைப் பல்கலைக்கழகம் மறுபரிசீலனை செய்து பழைய நடைமுறையை அமுல்படுத்துமாறும், ஆசிரியர்களுக்கு என கல்வியியல் பட்டப்படிப்பு அதாவது Bacheller of Education கற்கை நெறியை ஆரம்பிக்க துணைவேந்தர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டு கொண்டார்.

### ஆசிரியர்களின் சம்பள நிலுவை மற்றும் உள்ளீர்ப்பு

சில ஆசிரியர்கள் தமக்கு இதுவரை காலம் நியமனம் பெற்ற திகதியில் இருந்து, தற்போது சேவையிலுள்ள காலம் வரையிலான சம்பள நிலுவை தமது வலயக் கல்வி பணிமனையினரால் வழங்கப்படவில்லை எனவும், தமது உள்ளீர்ப்பு செயற்பாடுகளைக் கூட கல்விப் பணிமனை அதிகாரிகள் உடனடியாக செய்து முடிக்காமல், அலுமாரிகளுக்குள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவித்தனர். அத்துடன் வருடாந்த சம்பள ஏற்ற படிவம் பூர்த்தி செய்து கணக்காளரிடம் சமர்ப்பித்தும், இதுவரையும் 2005 ஆம் ஆண்டுக்குரிய சம்பள உயர்வு வழங்கப்படவில்லை எனவும் குறிப்பிட்டனர்.

### உயர் பாதுகாப்பு வலயமும் ஆசிரியர் இடர்பாடும்

உயர்பாதுகாப்பு வலயம் மற்றும் இராணுவ முகாம்களுக்கு அருகில் இயங்கும் பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக போக்குவரத்து நடைமுறையிலும், உள்நுழைவு அனுமதி பெறுதல், தங்குமிட அனுமதி பெறல், பாலியல் ரீதியான பிரச்சினைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். மேலும் பாடசாலைக்கு அருகில் இராணுவ முகாம் அமைந்திருப்பதால் மாணவர்களும், ஆசிரியர்களும் பல இன்னல்களை சந்திப்பதை தீவக வலயத்தில் வேலணை மத்திய துரைச் சாமி வித்தியாலயம், வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயம், வடமராட்சி கிழக்கு வலிகாம வலய பாடசாலைகள் பலவற்றைச் சுட்டிக்காட்ட முடியும்.

### போர் மற்றும் இயற்கை இழப்பீடு வழங்காமை

வடக்கு- கிழக்கு மாகாணத்தில் சேவை யாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள் போரால் இழந்த தமது பொருளாதாரத்தை மீளப் புதுப்பித்துக் கொள்ள இடர் கடன் கோரிய போது, நிதி இல்லை எனக் காரணம் காட்டி கடன் வழங்கவில்லை எனவும் கூறியதுடன் சுனாமியால் வீடு, உடைமைகளை இழந்த ஆசிரியர்களுக்கு வீடு வாங்குவதற்கும், கட்டுவதற்கும் குறைந்த அளவு வட்டியுடன் கடன் திட்டத்தை எமக்குத் தரவேண்டும் என சுனாமியால் பாதிப்படைந்த ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டனர்.

### கல்வி அதிகாரிகளுக்கும் - ஆசிரியர்களுக்கும் இடையிலான உறவு

பொதுவாக கல்வி அதிகாரிகளுக்கு ஆசிரியர்கள் பயப்படுகின்ற நிலைமையே காணப்படுகிறது. பாடசாலைக்கு மேற்பார்வை குழு வருகின்றது என செய்தியைக் கேட்டவுடன் - ஆசிரியர்கள் உடல், உளரீதியில் குழப்ப நிலையை அடைவதை அவதானிக்க முடிகின்றது. இந்தநிலை ஏன் எமக்கு ஏற்பட்டது என்ற வினாவை ஓர் ஆசிரியர் எழுப்பியதுடன், இதற்கு அவர்களுடைய நடவடிக்கைகளே காரணம் எனவும் குறிப்பிட்டார். இதற்கு மாற்று நடவடிக்கையை இவர்கள் கையாள வேண்டும். பிள்ளையுடன் எவ்வாறு சுமூகமான உறவைக் கையாள நுட்ப முறைகளை சொல்லித்தரும் இவர்கள், ஏன் ஆசிரியர்கள், அதிபர்களுடன் சுமூகமான உறவைப் பேண முடியவில்லை என்பது கேள்விக்குறியதாகவே உள்ளது. கல்வி அதிகாரிகள் - இராணுவ அதிகாரிகள் போன்று செயற்படுகின்றனர் எனவும் சிலர் குறிப்பிட்டனர்.

ஆசிரியர்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை விரும்பாத கல்வி உயர் அதிகாரிகள் இன்றும் உள்ளனர் எனக் குறிப்பிட்ட சில கல்வி வலய ஆசிரியர்கள், தாம் கல்வியியல் மற்றும் ஆசிரியர் சார்பான விடயங்கள் மற்றும் கல்வித்திட்டம் பற்றிய விடயங்களைத் தனிப்பட்ட ரீதியிலோ அல்லது பத்திரிகை வாயிலாகவோ வெளிப்படுத்துவதை விரும்பாத கல்வி அதிகாரிகள் இன்னும் உள்ளனர் எனக் குறிப்பிட்டதுடன், அண்மையில் குறித்த வலயத்தில் தமது சம்பள நிலுவையை பெறச் சென்ற இரு ஆசிரியர்களை அந்த வலயத்தின் கணக்காளர் குறித்த பாடசாலை பற்றியும், அப்ந்தப்பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர் பற்றி அலுவலக ஊழியர்கள், ஏனைய ஆசிரியர்கள் பலர் மத்தியில் திட்டித் தீர்த்தும் குறித்தும் கூறினார்.

இப்படியான வசைகள் எந்த அளவில் ஆசிரியர்கள் மத்தியில் விசனத்தை எற்படுத்தும் என்பதை ஏனைய ஆசிரியர்களும் அறிந்து கொள்ள வேண்டும் என்பது எமது அவா எனக் குறிப்பிட்டனர். அத்துடன், கல்வி அதிகாரியுடன் நியாயத் தன்மையில் உரையாடினால் கூட நியமனம், இடமாற்றம், பதவி உயர்வு போன்ற விடயங்களில் குறித்த ஆசிரியரை பழிவாங்கும் சம்பவங்களும், மிரட்டல்களும் இடம்பெறுகின்றது எனவும் ஆசிரியர்கள் குறிப்பிட்டனர்.

### ஆசிரியவாண்மைத்துவ விருத்திக்கான தடைகள்

இவ்வாண்டு ஆசிரியர் தினத்தின் தொனிப்பொருள் ஒரு பலம் வாய்ந்த கற்பித்தல் வலுவைப் பெறுவதற்கான பயிற்சி என்பதாகும். ஓர் ஆசிரியர் தனது பயிற்சியையும், துறைசார்ந்த மேற்படிப்புகளையும் மேற்கொள்ள எந்தளவுக்கு நடைமுறையில் கல்வி அதிகாரிகளினால் கற்கைக்கான விடுமுறை வழங்கப்படுகின்றது என்பதை அண்மையில் பட்டப்படிப்பு, முழு நேரப்படிப்புக்கு விடுமுறை வழங்காததை அடுத்து மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் முறையிட்ட வழக்கையும், பின்னர் ஆசிரியர்களுக்கு சார்பாக தீர்வு வழங்கப்பட்ட சம்பவத்தையும் ஆசிரியர் ஒருவர் எடுத்துக்காட்டினார். இந்த நிலைமை மாற்றப்பட்டு, ஆசிரியர்கள் தமது வாண்மைத்துவத்தையும், பயிற்சியையும் மேம்படுத்திக்கொள்ள ஊக்குவிக்கப்படவேண்டும் எனக் கூறினார்.

### எதற்கும் ஆசிரியர் மீது பழிபோடும் நிலைமை

வீதியில் ஒரு பிள்ளையோ அல்லது நபரோ பிழைவிட்டால் எங்க படித்தனி, யார் உனக்கு படிப்பித்தது. படிப்பித்த வாத்தியார் சரியில்லை என்றும், பரீட்சை முடிவில் வீழ்ச்சி என்றால்? வாத்திமார் சரியாகப் படிப்பிக்கவில்லை, அதுதான் பிள்ளைகள் படிக்கவில்லை என்றும் - இவர்களுக்கு என்ன அதிக விடுமுறை தானே, இலகுவான வேலை தானே என்ற மனப்பாங்கு அதிகளவு நிலவுவது ஆசிரியர்களாகிய எமக்கு மன ரீதியில் சோர்வை தருவதாக உள்ளது எனவும், ஒரு பிள்ளையின் விருத்தி மற்றும் வளர்ச்சி தனிய ஆசிரியரால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை என்பதை யாவரும் அறிவியல் ரீதியில் சிந்தித்துப் பார்க்க வேண்டும் எனவும் குறிப்பிட்டனர்.

இவ்வாறாக ஆசிரியர்கள் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர் என்பதைக் கூடியளவு எமது பிரதேசத்தை மையமாகக் கொண்டு நடத்தப்பட்ட அவதானிப்பு மற்றும் கலந்துரையாடல் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. இவற்றை பற்றி இந்த நாளில் கவனம் செலுத்தி, இவற்றுக்கு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுக்கும்பொழுதுதான் ஆசிரியத்துவம் மேன்மைபெற்று, எமது கல்வி அபிவிருத்தி இயக்கம் பெற வாய்ப்பு உண்டாகும் என்பதே எமது கருத்து.

# சுத்தமான சூழலும் சுகமான வாழ்வும்

மானிட சமூகத்தின் நவீன வளர்ச்சிக்கான பாதையின் பின்னால், சூழலுக்கு ஏற்படுத்தப்படுகின்ற ஒவ்வாத தாக்கங்கள் இன்று சுபீட்சமான மானிட வாழ்க்கைக்கும், இயற்கையின் இருப்பிற்கும் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ளன. பொதுவாக மனித வாழ்க்கை இயற்கையை நம்பியதாகவே அமைகின்றது. அந்த நம்பிக்கைக்கு மேலாக மனித செயற்பாடுகள் அமைகின்றபோது இயற்கை தனது இயல்பு நிலையிலிருந்து பிறழ்ந்து கொள்கின்றது. இது இன்றைய பூகோளம் எதிர்கொள்கின்ற மிகப் பெரிய சவால். எமது தாயகம்கூட இத்தகைய சவாலில் இருந்து தப்பிவிடவில்லை.

இந்த நியதியிலே தாயகத்தை நோக்கின், தமிழீழத்தில் சீரான முறையில் அகற்றப்படாமல், எங்கும் பரம்பிக் காணப்படுகின்ற கழிவுகளே, முதன்மையான சூழல் பிரச்சினையாக இனங் காணப்படுகின்றது.

நாம் எமக்கு பயன்படாதது, தேவையற்றது எனக்கருதும் ஒன்றை கழிவு என சூழலில் வீசி விடுகின்றோம். இவ்வாறு வீசப்படும் கழிவுகள், சூழலை மாசடையச் செய்து மனிதனின் சுகமான வாழ்வையும், சுத்தமான சுவாசத்தையும் கேள்விக்குறியாக்குவதுடன், நலமான சூழலைப் பேணுவதற்கு பிரதான தடைக்கல்லாகவும் காணப்படுகின்றது.

மனிதனின் அளவிற்கு அதிகமான ஆசை, திட்டமிடப்படாத வாழ்வு, செயற்கைகளை அதிகம் நேசித்தல் என்பன சூழலைப் பாதுகாக்க வேண்டிய அவனுடைய கடமையை மறைத்து விட்டன. விளைவாக அநாகரிகமான முறையில் நாகரிக மனிதனால் கழிவுகள் சூழலில் வீசப்படுகின்றன. உண்மையில் சூழலில் வீசப்படும் ஒவ்வொரு கழிவுக்கும் யாரோ ஒருவர் காரணமாகின்றார். கழிவுகள் தாமாகத் தோன்றக் கூடிய சுயம்புலிங்கங்கள் அல்ல. எம்மால் உருவாக்கப்படும் இக்கழிவுகள் சீரான முறையில் அகற்றப்படவேண்டும். ஆனால், எமது எல்லைக்கு அப்பால் கழிவுகளை அகற்றுவதையோ வீசுவதையோதான் நாம் கழிவகற்றல் என்கின்றோம். எம்மிடையே காணப்படும் மிகப் பிற்போக்கான தவறான சிந்தனையாகவே இது காணப்படுகின்றது.

இவ்வாறு திட்டமிடப்படாது பொறுப்பற்ற முறையில் நாம் கழிவுகளை வீசுவது எம்மைக் காக்கும் இயற்கைத் தாய்க்கு செய்யும் நன்றிக் கடன் அல்ல. கழிவுகளின் பரவல் அதிகரிக்கும் போது தொற்று நோய்க்கிருமிகளின் சுபீட்சமான வாழ்க்கைக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன. நாம் அந்த வாய்ப்பினை வழங்குகின்றோம். நிலக்கீழ் நீர் தனது சுயத்தன்மையை இழக்கின்றது. சுத்தமான காற்று விலைவாசிப் பொருளாகின்றது. மொத்தத்தில் எம்முடையதும், எதிர்கால சந்ததியினதும் ஆரோக்கியமான வாழ்வு கேள்விக்குறியாகின்றது. மிகவும் மோசமான ஒரு வாழ்க்கை நிலைக்கு நாம் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

**இப்போது சிந்திப்போம்**

இவ்வாறான ஒரு நிலையினை நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டுமா?

எமது எதிர்கால சந்ததியின் நல்வாழ்வு பாதிக்கப்படுவதற்கு நாமே காரணமாக அமைவதா?

*சிந்தனைகளின் விளைவாக கிடைக்கும் ஒரே விடை*

எமது தாயகத்தில் பரந்து காணப்படுகின்ற கழிவுகளை அகற்றி நலமான வாழ்வினை உறுதிப்படுத்துவதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைவோம். இது காலத்தின் கடமை.

இத்தகைய கட்டாய தேவையினை உணர்ந்த சூழல் நல்லாட்சி ஆணையம் ஒக்ரோபர் மாதம் 7ஆம் நாளை சூழல்பாதுகாப்பு முன்னோடித் தினமாக நிர்ணயித்துள்ள அன்றைய தினத்தில் தாயகத்தின் கழிவுகளை அகற்றுவதற்காக அனைத்து சமூகங்களும், அமைப்புக்களும், தனிமனிதர்களும் ஒன்றிணையவேண்டும். எவ்வாறு இன விடுதலை என்ற ஒரு இலக்கினுள் நாம் அனைவரும் ஒன்றிணைந்தோமோ அவ்வாறான ஒரு இணைப்பு இக்கழிவகற்றல் செயற்பாட்டில் அவசியமாகின்றது. அதேவேளை இது கழிவகற்றல் செயற்பாட்டிற்கான ஆரம்ப தினமாக அமையுமேயன்றி நிறைவு தினமாக அமையாது. ஏனெனில், இது ஒரே நாளில் நிறைவேற்றக்கூடிய செயற்பாடு அல்ல. எனவே, தொடர்ந்தும் இந்தச் செயற்பாட்டினை முன்னெடுத்துச் செல்லவேண்டிய கடப்பாடு எமக்குண்டு.

## ஆரோக்கியமான சூழலும் நலமான வாழ்வும்

**நாங்கள் புரிந்திருக்கின்றோமா?...**

* எமது வாழ்வு இயற்கையின் பிரிக்கப்படாத அங்கம்.

* இயற்கை தன்னுள் கொண்டுள்ள தன்னியல்பான சுழற்சி வட்டத்தின் மூலம்தான் எங்களுக்குத் தேவையான சுத்தமான காற்று, நீர், வெளிச்சம் என்பன கிடைக்கின்றது.

* மனிதர்களால் கண்டுபிடிக்கப்பட்ட விஞ்ஞான வளர்ச்சி என்பது இயற்கையின் நன்கொடைகளை மேலும் வளப்படுத்துவதற்கும், பாவிப்பதற்கும் மட்டுமே உரியது.

* கண்ணுக்குத் தெரியும் இயற்கை காரணிகளான நீர், நீர்நிலைகள், நிலம், மண்படைகள், தாவரங்கள், யாவும் தமது இயல்பான நிலைகளிலிருந்து மனிதனால் அளவுக்கு அதிகமாக சிதைக்கப்படும்போது தம்மை இயல்பாகவே புத்தாக்கம் செய்யும் திறன்களை இழந்து விடுகின்றன.

* இயற்கை வளங்கள் தமது புத்தாக்கத்திறனை இழக்கும்போது எங்கள் உயிர் வாழ்வுக்குத் தேவையான காரணிகளைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது.

* இயற்கையை நாம் அழிக்கும்போது எம்மை தாங்கிவைத்துள்ள உயிர்ச்சுற்று வட்டச் சூழலை அழித்து எம்மையே அழிக்கின்றோம் என்பதே உண்மையாகும்.

**நாங்கள் அறிந்திருக்கவேண்டியவை**

* வாழ்க்கையை இலகுபடுத்துவதற்காக எம்மால் உருவாக்கப்பட்டுள்ள பல பொருட்கள் எமக்கும், இயற்கைக்கும் இடையிலான தொடர்பில் மீள் நிரப்பமுடியாத இடைவெளியையும், சேதத்தினையும் ஏற்படுத்துகின்றன.

* கூரைத்தகடுகளாகப் பயன்படுத்தப்படும் அஸ்பெற்றஸ் எனப்படும் கல்நாரிழை மூலப் பொருள் நீண்ட காலத்தில் மனிதர்களுக்கு சுவாசப் புற்றுநோயை உருவாக்குகின்றது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இதனால் வளர்ச்சி பெற்ற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் எல்லாம் கல்நாரிழை தகடுகளின் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதோடு உடைந்த, சேதமடைந்த ஓடுகளைக் கையாள்வதற்குக்கூட கடுமையான விதிகள் அமுலாக்கப்படுகின்றன.

* நாளாந்தப் பாவனைக்காக எங்களால் பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் மூலப்பொருட்களால் உருவாக்கப்பட்ட பொருட்களும், பொதிப் பைகளும், கடதாசிகளும் இலகுவில் உக்கி அழியாத பொருட்களாக நிலத்தில் சேருவதால் நிலத்தினுள் நீரும் காற்றும் ஊடுருவிச் செல்லமுடியாமல் தடைப்பட்டு மண்படைகள் வளமற்றுப் போகின்றன. இது வெள்ளம் தேங்கி நிற்பதற்கும், மண்படை தன்னை வளம்படுத்திக்கொள்ள முடியாமைக்கும், நீர் தன்னைப் புதுப்பித்துக்கொள்ள முடியாமைக்கும், காரணமாக ஆவதோடு நாங்கள் வளர்க்க விரும்பும் மரங்கள் ஆழமாக வேர் விட்டு வளரமுடியாமலும் போகின்றது.

* எம்மால் பாவனைக்குப்பின் வெளியகற்றப்படும் கழிவுநீர் சரியான முறையில் ஒழுங்கமைக்கப்பட்டு அகற்றப்படாமையினால் அவை தேங்கி நின்று பல்வேறு நோய்காவிகளான நுளம்பு போன்ற உயிரினங்கள் உருவாகி எமது வாழ்வின் ஆரோக்கியத்தையும் பாதிப்பதோடு உழைப்புத்திறனையும் குறைத்து கிடைக்கும் வருமானத்தையும் மருத்துவச் செலவுகளுக்காக செலவழிக்க வேண்டி ஏற்படுகின்றது.

* எம்மால் வீசி எறியப்படும் கழிவுப் பொருட்கள் உக்கக்கூடியன, மீள்பாவனைக்கு பயன்படுத்தக்கூடியன, உக்கவும் மீள்பாவனைக்கும் பயன்படுத்தமுடியாதவை எனத் தரம் பிரித்து அகற்றப்படாமையினால் பெருமளவு பொருளாதார நட்டம் எமக்கு ஏற்படுகின்றது. உக்கக்கூடிய பொருட்கள் இயற்கை உரமாக மாறுவதனால் செய்கை உரத்திற்குச் செலவழிக்கின்ற பணம் மீதியாகும். செயற்கை உரமிட்ட உணவைச் சாப்பிடுவதனால் எமக்கு ஏற்படக்கூடிய நோய்களில் இருந்து விடுதலையும், அதற்கு செவழிக்கப்படும் மருத்துவச் செலவுகளின் சுமையும் குறையும். மீள்பாவனைக்குப் பயன்படுத்தக்கூடிய கண்ணாடிகள், உலோகங்கள், பிளாஸ்ரிக் பொருட்கள் ஆகிய வற்றை சேகரித்து உற்பத்தி நிலையங்களுக்கு வழங்குவதனால் மேலதிக வருமானம் கிடைப்பதோடு அத்தகைய மூலப்பொருட்களை புதிதாகத் தேடுவதற்காக இயற்கையை சேதப்படுத்துகின்ற அபாயமும் குறையும்.

* நாம் ஒவ்வொரு கணப்பொழுதும் சுவாசிக்கும் காற்று வெளிவிடப்படும்போது அசுத்தமான காபனீரொட்சைட்டாக மாறுகின்றது. இதனை மீளவும் சுத்தமான காற்றாக மாற்றுவதற்கு இயற்கை தந்த அரும்பெரும் கொடைகள் தாவரங்கள். மரங்களை வெட்டுதல், காடுகளை அழித்தல், துப்பரவு செய்தல் என்னும் பெயரால் மரங்களையும், பற்றைகளையும், வயல் தரைகளையும் கொளுத்தி எரித்தல் என்பன காற்றில் காணப்படும் ஒட்சிசனின் அளவைக் குறைப்பதற்குக் காரணமாக அமைவதோடு, காற்றில் மீளவும் ஒட்சிசனின் அளவை மாற்றுகின்ற பொறிமுறையை இல்லாமல் அழித்து எம்மை நாமே மூச்சுத்திணறி இறக்க வைக்கும் அபாயத்தை ஏற்படுத்திக்கொண்டு இருக்கின்றோம்.

* எமது வாழ்விடங்களையும் சுற்றுப்புறச் சூழலையும் அழுக்கும், குப்பைகளும் நிறைந்த சூழலாக வைத்திருப்பதன் மூலம் எமது வாழ்க்கையில் மகிழ்ச்சியை உருவாக்கித் தரக்கூடிய தூய்மையானதும், அழகானதுமான இடங்களைத் தேடி அலையவேண்டி ஏற்படுகின்றது.

* அசுத்தமான சுற்றுப்புறச் சூழல் மனத்தில் அழுத்தத்தை ஏற்படுத்துவதோடு நாளாந்தம் எம்மையும், எமது உடைகள், பாவனைப் பொருட்களையும், சுத்திகரிப்பதற்காக பெருமளவு நேரமும் பொருட்செலவும் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றது.

**எங்களால் நம்பமுடியுமா?**

* அமெரிக்காவில் ஒவ்வொரு மணித்தியாலமும் வீதியில் வீசி எறியப்படும் பிளாஸ்ரிக் போத்தல்களின் எண்ணிக்கை 2.5 மில்லியன் ஆகும். இவற்றைத் தொடர்ச்சியாக அடுக்கினால் மூன்று வாரத்திற்கு ஒருமுறை பூமியில் இருந்து சந்திர னுக்கு பாலம் கட்டமுடியும்.

* இந்த உலகத்தில் பூமியில் இருக்கக்கூடிய எண்ணை வளம் 2040 ஆம் ஆண்டுகளில் முடிவுக்கு வந்துவிடும்.

* ஒவ்வொரு நாளும் சராசரியாக உலகத்தின் ஐந்தில் ஒரு மனிதன் உணவின்றி பட்டினியுடனேயே நித்திரைக்குச் செல்கின்றான்.

* வளர்ச்சி பெற்ற கைத்தொழில் நாடுகளில் வாழுகின்ற மக்கள் சராசரியாக ஒரு வருடத்தில் ஆறு தொடக்கம் ஏழு கிலோ கிராம் செயற்கையான உணவுப் பதனூட்டிகளை சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

* சராசரியான ஒரு யப்பானியப் பெண்ணின் ஆயுட்காலம் 84 வருடங்களாக காணப்படும்போது பொட்ஸ்வானா நாட்டில் பெண்களின் ஆயுட்காலம் 35 வருடங்கள் மாத்திரமே.

* வறுமையான குடும்பங்களில் வாழுகின்ற சிறுவர்கள் உளநோயின் தாக்கத்திற்கு உட்படும் அளவு, செல்வந்த குடும்பங்களில் வாழுகின்ற சிறுவர்களைவிட மூன்று மடங்கு அதிகமாகும்.

* அண்மைக்காலங்களில் இந்த உலகத்தில் நடைபெற்ற ஆயுதச் சண்டைகளில் நான்கில் ஒரு பங்கானவை இயற்கை வளங்களை பெற் றுக்கொள்வதற்காகவே போரிடப்பட்டன.

**நாங்கள் என்ன செய்யப்போகின்றோம்**

* முன்குறிப்பிட்ட விடயங்களை யதார்த்த பூர்வமாக புரிந்துகொள்வோம்.

* இயற்கை சூழலுக்கும் எம்முடைய வாழ்வுக்கும் இடையில் உள்ள பிரிக்கப்பட முடியாத இணைப்பின் பெறுமதியினை முதன்மைப் படுத்துவோம்.

* உயிரினங்களை உருவாக்கி தாலாட்டி, சீராட்டி வளர்த்தெடுத்து மீளவும் தன்னகத்தே உள்ளீர்த்துக்கொள்வதன் மூலம் அடுத்த தலைமுறைக்கும், அடுத்த தலைமுறையின் வளமான வாழ்வுக்கும் வழிசமைக்கும் இயற்கையின் களைப்புறாத மீள்உருவாக்கல் தன்மையை மேம்படுத்துவோம்.

* அபிவிருத்தி, நவீனத்துவம், இலகுபடுத்தல் என்ற காரணங்களுக்காக உருவாக்கப்பட்டு சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பொருட்களின் பாவனையை மிக நிதானத்தோடு கையாளுவோம்.

* எம்மால் பாவனையின் பின் கழிவுகளாக வெளியகற்றப்படுகின்ற பொருட்கள், கழிவு நீர், காற்று என்பன மீளவும் இயற்கையுடன் ஒன்றித்து போகக்கூடிய முறைகளை கண்டறிந்து உருவாக்கி இயற்கையின் இலகுவான தொடர் செயற்பாட்டுக்குப் பலம் சேர்ப்போம்.

* எமது கவலையீனங்களாலும், ஒழுங்கமைக்கப்படாத செயற்பாடுகளாலும், தூரநோக்கற்ற குறுகிய கால பயன்பாடு கருதிய நடவடிக்கைகளாலும், எம் ஒவ்வொருவர் மீதும், எமது குடும்பத்தவர்கள், நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள், எமது எதிர்காலச் சந்ததியினர் மீதும் நாங்கள் ஏற்படுத்தியிருக்கின்ற அபாயகரமான நச்சுத்தன்மை கொண்ட சூழலை இல்லாதொழிப்பதென கங்கணம் கட்டுவோம்.

* எந்த ஒரு செயற்பாட்டுக்கும் முன் ஒரு கணம் சூழலுக்கும், எங்களுக்கும் உள்ள தொப்புள் கொடி உறவினைச் சிந்தித்த பின் எங்கள் கரங்களில் இருந்து வீசி எறியப்படும் பொருட்களை உரிய இடங்களில் சென்று பயன்படக் கூடிய முறையில் அவற்றை கையாளுவோம்.

**இயற்கைக்கும் எங்களுக்கும் உள்ள தாய்பிள்ளை உறவை எவ்வாறு மேம்படுத்தப்போகின்றோம்**

* சூழல்நல்லாட்சி ஆணையகத்தின் வேண்டுகோள் என்பது ஒரு குறுகிய கால தற்காலிக முயற்சித்திட்டமல்ல, நீண்டகால அடிப்படையில் எமது ஆரோக்கியமான வாழ்வையும், பாதுகாப்பான இயற்கைச் சூழலையும் உறுதிப் படுத்துவதற்கான செயற்திட்டத்தின் முதற்படி.

* இந்தச் சூழல் முன்னோடி வாரத்தில் எல்லோரும் ஒன்றிணைந்து எமது அழுக்கு மூட்டைகளைச் சுத்திகரித்து அவற்றை ஒழுங்கு படுத்தி உரியமுறையில் அகற்றுவோம்.

* தொடர்ந்து எதிர்காலத்தில் சுற்றுச்சூழலை தொடர்ச்சியாகப் பராமரிப்பதற்கும், கழிவுகளைச் சிறப்பாக கையாளுவதற்குமென திட்டங்களை உருவாக்கி தனியாள், குடும்பம், குழுக்கள், நிறுவனங்கள் என்ற வகையில் நடைமுறைப்படுத்துவோம்.

* அழகுமிகு இயற்கைச் சூழலை எம்மைச் சுற்றிக் கட்டியெழுப்புவதன் மூலமும், அதனைத் தொடர்ந்து பராமரிப்பதற்கான செயல்முறைகளை எமது அன்றாட வாழ்க்கையில் பெறுமானங்களாகக் கொள்வதன் மூலமும், அரசியல் விடுதலையை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்ற எமது தேசத்தில் உன்னதமான மானிட மேன்மை கொண்ட சமூகத்தின் இருப்புக்கு செழுமையூட்டும் இயற்கையின் பௌதிகச் சூழலினைப் பேணிப்பாதுகாத்து நிலைநிறுத்துவதற்கு அனைவரும் ஒன்றிணைவோம்.

தாயகப் பிரதேசத்தின் சூழலைச் சுத்தப் படுத்தி, சுகாதாரம் பேணுவதன் மூலம் மக்களின் ஆரோக்கியமான நலவாழ்வினை மேம் படுத்தல் என்ற இலக்கோடு இப்பணியில் நாம் கால் வைக்கின்றோம். இலக்கினை எட்டுவதற்காக நாம் முன்னெடுக்க வேண்டிய பணிகள்

✦ பொலித்தீன், பிளாஸ்டிக், அஸ்பெஸ்டல் போன்றன சூழலை நச்சுத்தன்மையாக்கும் கழிவுகளை தாயகத்திலிருந்து அகற்றி இயற்கைச் சூழலைப் பேணுதல்.

✦ எளிதில் உக்கி அழிந்துபோகாத கண்ணாடித் துண்டங்கள், தகரம் போன்ற திண்மக் கழிவுகளை அகற்றுவதன் மூலம் அத்தகைய கழிவுகளின் பரவலான தேக்கத்தைத் தவிர்த்தல்.

✦ கழிவுகளைத் தரம் பிரித்து அகற்றுவதன் மூலம் உக்கி உரமாகக்கூடிய கழிவுகளைத் தரமான வளமாக்கிகளாகப் பயன்படுத்துதல்.

✦ சீராகத் திட்டமிட்டு வெளியேற்றப்படாத கழிவுநீர் ஆங்காங்கே தேங்கி நிற்பதால் ஏற்படுகின்ற துர்நாற்றம், தொற்றுநோய்த்தாக்கம் என்பனவற்றைத் தவிர்க்கும் வகையில் கழிவுநீர் நேர்த்தியாக வழிந்தோடக்கூடியவாறு கால்வாய்களை, செம்மையாக வடிவமைத்தல்.

✦ மாசடைந்த நீரைத் தேக்கி வைத்திருக்கும் பொருட்களை அகற்றுவதுடன், அவ்வாறான இடங்களை சுத்தம் செய்து நீர்த்தேக்கத்தை அழிப்பதன் மூலம் நோய்ப் பெருக்கமில்லாத, சுகமான வாழ்வை உறுதிப்படுத்தல்.

✦ கழிவு சேகரிப்பு பொதிகளைப் பொருத்தமான இடங்களில் வைத்தல்.

✦ அனைவரும் தாயகத்தின் மேம்பாட்டிற்காக, பொறுப்புடன் இந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து பின்பற்றல்.


✦ சூழலைச் சுத்தப்படுத்தி தரும் இயற்கை வடிகட்டிகளான மரங்களை நாட்டி பராமரித்தல்.

✦ யதார்த்தமாக நோக்கினால் கழிவுகள் மீள்பயன்பாட்டுக்கு ஒவ்வாதவையல்ல. பொலித்தீன், பிளாஸ்டிக் போன்ற கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்துவதன் மூலம் இவ்வாறான உற்பத்திகளின் பெருக்கத்தைக் குறைக்கலாம். உக்கிப் போகக்கூடிய கழிவுகளைத் தரமான உரமாக்கி மண்ணை வளமாக்கிக் கொள்ளலாம். ஆக, கழிவு என்பது பயனற்ற ஒன்றல்ல.

எம்மைப் பொறுத்தவரை நாம் விடுதலைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் சமநேரத்தில் மேம்பாட்டுக்கான திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்லும்போதுதான் பெறப்படுகின்ற விடுதலை அர்த்தமுள்ளதாக அமையும். அதே வேளை அபிவிருத்திக்குச் சமாந்தரமாக சூழல் பாதுகாக்கப்படும்போதே, கிடைக்கின்ற மேம்பாடானது நிலைத்து நிற்கும். எனவே நலமான சூழலை நிலைநாட்டுதல் என்ற இலக்கோடு நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

– தமிழீழ சூழல் நல்லாட்சி ஆணையம்






பன்னிரு வேங்கைகளின் 18வது ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று வல்வை தீருவில் புனித சதுக்கத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புனரமைப்புக்காக பண்ணைப்பாலம் இரண்டு வாரங்களுக்கு மூடப்படும்!

யாழ்ப்பாணம்

பண்ணைப் பாலத்தின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இந்தப் பாலத்தினூடாக போக்குவரத்து இரு வாரங்களுக்கு தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளது.

பண்ணைப்பாலத்தின் புனரமைப்பு வேலைகள் தொடர்பான கலந்துரையாடல் நேற்றுக்காலை 10 மணிக்கு அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது. அந்தக் கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் பின் பண்ணைப்பாலம் புனரமைப்பு தொடர்பாக அரச அதிபர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்-

பண்ணைப்பாலம் புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்வரும் 15ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதிவரை பண்ணைப் பாலத்தினூடான போக்குவரத்து தற்காலிகமாக இருவாரங்களுக்கு இடைநிறுத்தி வைக்கப்படவுள்ளது.

தீவுப்பகுதி - யாழ் நகர் இடையே பயணிகள் போக்குவரத்துசேவை கடல்மார்க்கமாக நடத்தப்படும். கடல் மார்க்கமாக படகுகளை சேவையில் ஈடுபடுத்தும்போது எந்தெந்த இடங்களில் பயணிகளைஏற்றி இறக்குவது என்பது தொடர்பான இடங்களை பொறியியலாளர்கள் மற்றும் கடற்படையினர் ஆகியோர் பார்வையிட்டு தெரிவுசெய்வர்.

கடல்மார்க்கமாக இடம்பெறும் படகுச் சேவையில் பிரயாணச் செலவு பால புனரமைப்பு திட்ட நிதியிலிருந்து வழங்கப்படுவதால் இலசவமாகவே சேவை நடத்தப்படும். வியாபார நோக்கமாகப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு மட்டும் கட்டணம் அறவிடப்படும்.

கடற்தொழில் சமாசத்தால் நடத்தப்படும் இந்த தற்காலிக போக்குவரத்துச் சேவையை, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பார்வையிடுவர். மேலும் எதிர்வரும் 31ஆம் திகதி இந்தப் பாலத்தை மீளத்திறக்க நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு அரச அதிபர் தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் வீதி அபிவிருத்தி அதிகார சபை பிரதம பொறியியலாளர், கடற்தொழில் சமாசத்தின் நெடுந்தீவு மற்றும் வேலணை பிரதேச செயலர்கள், கடற்படை அதிகாரிகள், போக்குவரத்துச் சபை அதிகாரிகள் மற்றும் சிற்றூர்திச் சேவை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# தேர்தலில் போட்டியிடுவதற்கு மஹிந்தவும் கட்டுப்பணம்!

கொழும்பு

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ நேற்றுக்காலை கட்டுப்பணம் செலுத்தினார்.

மகிந்த ராஜபக்ஷ சார்பில் சுதந்திரக்கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன நேற்றுக்காலை 10.45 மணியளவில் கட்டுப்பணத்தை செலுத்தினார்.

இன்று நண்பகல் 12 மணிவரை கட்டுப்பணம் செலுத்துவதற்கான கால அவகாசம் உள்ளது.

இதுவரை 9 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ, சிறிலங்கா தேசிய முன்னணியின் விமல் கீகஹனகே, ஐக்கிய சோசலிச கட்சியின் சிறிதுங்க ஜயசூரிய, புதிய இடதுசாரி முன்னணியின் சமில் ஜயநெத்தி, சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் ஜே.ஏ.பி. நெல்சன் பெரேரா, சோசலிச சமத்துவக்கட்சியின் விஜே டயஸ், ஐக்கிய தேசிய மாற்று முன்னணியின் சாந்த தர்மத்வஜ, ஐக்கிய இலங்கை பொதுஜன கட்சியின் விக்டர் ஹெக்டிகொட ஆகிய வேட்பாளர்கள் கட்டுப் பணம் செலுத்தியுள்ளனர்.

# நுண்கலை மாணவர்களின் போராட்டம் இடைநிறுத்தம்!

யாழ்ப்பாணம்

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறை இறுதி வருட மாணவர்கள் சிலர் பிரதான பாடமான வாய்ப்பாட்டில் திட்டமிட்டுப் பழிவாங்கப்பட்டதாக தெரிவித்து மேற்கொள்ளப்பட்டுவந்த சாத்வீகப் போராட்டம் நேற்று நண்பகல் இடைநிறுத்தப்பட்டது.

நுண்கலைத்துறை இறுதி யாண்டு மாணவர்கள் பல்கலைக் கழக நிர்வாகத்தால் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக கடந்த திங்கட்கிழமை தொடக்கம் பல்கலைக் கழக இராமநாதன் மண்டபத்திற்கு முன்பாக சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்தனர்.

இன்றும், நாளையும் நடைபெறவுள்ள பட்டமளிப்பு விழாவைக் கருத்தில்கொண்டும் சில கோரிக்கைகளை துணைவேந்தர் ஏற்றுக்கொண்டதையடுத்தும் போராட்டம் இடைநிறுத்தப்பட்டதாக அவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் ஒதுக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றப்படாதுவிடின் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பாதிக்கப்பட்ட இசைத்துறை மாணவர்கள் தெரிவித்தனர்.

# கைக்குண்டு வீச்சு!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி புனர்வாழ்வு அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் எம்.பி.அப்துல் ரகுமானின் வீட்டின் மீது நேற்று முன்தினமிரவு இனந்தெரியாத நபர்களால் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தக் கைக்குண்டு வீச்சால் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த அவரது உத்தியோகபூர்வ வாகனமும், வீட்டின் முன்பக்கமும் சேதமடைந்தது.

சம்பவத்தின் போது அவரும் மனைவியும் பிள்ளைகளும் வீட்டில் இருந்த போதும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

# சாதனை புரிந்த இளையோர்களுக்கு...

தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் - 2005 ஆம் ஆண்டில் விளையாட்டுத் துறையில் சாதனை புரிந்த இளையோருக்கும், அவர்களின் பயிற்றுனர்களுக்கும் - கௌரவிப்பும் தேசிய விருதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வழங்கிக் கௌரவித்தார்.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த முகமட் காறீஸ், கூட்டு மெய்வல்லுனர் நிகழ்வுகளில் சாதனையாளர்கள் ஆர்.ரதீசன், ரீ.நிசாந்தினி ஆகியோரும் இவர்களின் பயிற்றுனரான விஜயநீதன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சகாயரட்ணராஜா நிறஞ்சன் மற்றும் அவரது பயிற்றுனரான எம்.முகுந்தன்,

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சாதனையாளர் எம்.பிரதீப்குமார் மற்றும் அவரது பயிற்றுநர் றொகான் இராஜசிங்கம், உயரம் பாய்தல் சாதனையாளர் கமலமோகன் மற்றும் அவரது பயிற்றுனர் செ.ரமணன், உதைபந்தாட்டச் சாதனையாளர்களான மன்னார் புனித சவேரியார் கல்லூரி பதின்மூன்று வயதுப் பிரிவு வீரர்கள் மற்றும் அவர்களின் பயிற்றுனர் தா.ஜேக்கப் ஆகியோரும் தமிழீழ தேசிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

உதைபந்தாட்டச் சிறப்புச் செயற்பாட்டிற்காக மன்னார் புனித சவேரியார் கல்லூரி அதிபர் அருட்சகோதரர் ஸ்ரனிஸ்லோஸ், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளரால் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

தமிழீழ விளையாட்டுத்துறை, இளையோர் செயற்பாட்டு நிறுவனம் என்பன இத் தேசிய விருது வழங்கும் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் -

தமிழீழ தேசமென்பது கல்வியிலும், விளையாட்டுத்துறையிலும் மிக உயர்ந்த வளர்ச்சியடைய வேண்டுமென்ற நோக்கோடு, எமது தேசியத் தலைவரால் அதற்கான கட்டமைப்புக்கள் நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

போர் நெருக்கடி தணிந்திருக்கும் இன்றைய சூழலில் எமது சிறார்களின் கல்வி, விளையாட்டு வளர்ச்சியடைய வேண்டும். எமது இளைய தலைமுறையினர் உடல், உள ஆரோக்கியத்துடன் இந்தத் தேசத்திலே உலாவ வேண்டும். வளர்ச்சியடையவேண்டும் என்பது எமது தலைவரின் எதிர்பார்ப்பு. எமது தலைவரின் விருப்புக் கேற்பவும், ஆலோசனைக்கமையவும், கல்வி, விளையாட்டுத்துறைகளை வளர்த்து வருகிறோம்.

கல்வி, விளையாட்டுத் துறைகளை - இருக்கின்ற வளங்களைக் கொண்டு இயன்றவரை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம். அதில் நாம் முழுமையடைந்ததாகக் கூறமுடியாது.

எமது தேசத்திற்கு நிரந்தரமான தீர்வு வருகின்றபோது, எமது இளைய தலைமுறையினரை சிறப்பாக கல்வி, விளையாட்டுத்துறைகளில் வளர்த்துச் செல்லலாம் என்ற பேரவா எமக்குண்டு.

ஆனால், இன்றுகூட ஒரு நெருக்கடியான காலமாக இருந்தாலும் எமது சிறார்களை ஆரோக்கியமான முறையில் வளர்க்கவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். குறிப்பாக சிறார்கள் கல்வி, விளையாட்டுத் துறைகளில் மிகச் சிறப்பான ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டுமென்பதில் எமது தலைவர் பெருவிருப்பமாகவுள்ளார்.

தமிழர் தாயகத்தின் விளையாட்டுத்துறையினை வளர்த்தெடுப்பதற்கு அனைவரும் உழைக்கவேண்டும்.

இலங்கைத் தீவிலே - தமிழர் தேசம், விளையாட்டுத்துறையில் முன்னணி வீரர்களாக வந்து உலக அரங்கில் நாம் விளையாட்டுக்களை நிகழ்த்தக்கூடிய நிலைக்கு வர வேண்டும். விளையாட்டுத்துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சிகண்டு உலக அரங்கில் மிளிர வேண்டும்.

பூமிப்பந்திலே தமிழீழ தேசத்தினுடைய வீரர்கள் ஆற்றலுள்ளவர்களென நிரூபிக்கவேண்டுமென்பது எமது தேசத்தின் கனவாகவுள்ளது.

அதனை நோக்கித்தான் எமது தலைவரும் எமது விடுதலையமைப்பும், எமது மக்களும் ஒரு அரசியல் போராட்ட மைதானத்திலே தீவிரமாக செயற்பட்டு வருகின்றோம்.

நாம் ஒரு போராட்ட சூழலில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் வளர்ந்து வரும் எமது இளஞ்சந்ததிதான் எதிர்காலத்தில் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

பல உயிர்களை விலையாகக் கொடுத்துக் கட்டியெழுப்பி வரும் எமது தேசத்தில், எதிர்காலச் சந்ததி மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்ற குறிக்கோளுக்காகத்தான் எமது தலைவர் எமது விடுதலைப் போராட்டத்தை நகர்த்தி வருகிறார்.

மலரப்போகின்ற தேசத்திலே எமது இளைய தலைமுறையினர் மகிழ்ச்சியாக வாழவேண்டும்.

உலக வீரர்கள் சங்கமிக்கும் ஒலிம்பிக் போட்டிகளில் தமிழர் தாயக வீரர்கள் வெற்றிகளைக் குவிக்க வேண்டும் என்பது எமது கனவாகவுள்ளது. அது நிறைவேற எமது தாயக வீரர்கள் உழைக்கவேண்டும்.

விளையாட்டுத் துறையில் தமிழர் தாயகம் எதிர்காலத்தில் பல வெற்றிகளைக் குவிக்கவேண்டும். என்றோ ஒருநாள் உலகரங்கில் எமது அடையாளங்களை நிலைப்படுத்திக் கொள்ளக்கூடிய நாள் விரைவில் வரும்.

இன்றைய நிகழ்வில் கலந்து கொண்டுள்ள வெற்றியீட்டிய வீரர்களை எமது தேசியத் தலைவரின் சார்பில் கௌரவிப்பதில் நாம் பெருமகிழ்வடைகிறோம் எனத் தெரிவித்தார்.

# தீருவில்...

மலர் மாலைகளையும், ஈகச்சுடர்களையும் மாவீரர்களின் உறவினர்கள் அணிவித்து ஏற்றிவைத்தனர். தொடர்ந்து பொதுமக்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர். அதனைத் தொடர்ந்து நினைவுரைகளும் இடம்பெற்றன.

இதேவேளை, பன்னிரு வேங்கைகளின் நினைவுநாள் தமிழர் தாயகப் பகுதி எங்கும் மிகவும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# நோர்வே...

போர் நெருக்கடிகள் அதிகரிப்பதைத் தவிர்க்கும் நோக்குடனேயே நோர்வே தூதுவர் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தவிருப்பதாகவும் -

அடுத்த வாரம் இலங்கை வரவுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் ட்ரொன்ட் புறூவ் ஹொவ்டே - யுத்தநிறுத்த நெருக்கடிகள் தொடர்பான பேச்சுக்களை நடத்தவிருப்பது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் ஆராயப்படவிருப்பதாகவும் தெரிய வருகிறது.

# யாழ். பல்கலைக்கழக...

காலை 10.30மணிக்கும், மூன்றாவது அமர்வு காலை 11.30க்கும், நான்காவது அமர்வு பிற்பகல் 1.30க்கும், ஐந்தாவது அமர்வு பிற்பகல் 2.30 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இதற்கமைய கலைமாணிப்பட்டத்தை 700பேரும், நுண்கலை மாணிப்பட்டத்தினை 175பேரும், மருத்துவமாணிப்பட்டத்தை 139 பேரும், சித்த வைத்திய சத்திர சிகிச்சை மாணிப்பட்டத்தை 27 பேரும், முதுமெய்யியல்மாணிப்பட்டத்தை 26 பேரும், முதுகலைமாணிப் பட்டத்தை 36 பேரும், விஞ்ஞான மாணிப்பட்டத்தை 170 பேரும், தொழில் நிர்வாகமாணிப்பட்டத்தை 198பேரும், முதுகல்விமாணிப்பட்டத்தை 110 பேரும், விவசாயமாணிப் பட்டத்தை 49பேரும் பெறவுள்ளனர்.

இந்த மாணவர்களை யாழ்.பல்கலைக்கழகம் சார்பாக வாழ்த்துவதாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்தார்.

இதேவேளை, யாழ்.பல்கலைக் கழக பொறியியற்துறை மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழகத்தில் வெளியிட்ட நூல்களும் பல்கலைக்கழகத்தில் உள்ளவர்களினால் வெளியிட்ட நூல்கண்காட்சி ஒன்றும் நடைபெறவுள்ளது. இந்தக் கண்காட்சி காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறும். இங்கு புத்தக விற்பனையும் நடைபெறவுள்ளது.

# ரணிலை ஆதரிப்பதாக....

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் ரவூப் ஹக்கீம் கூறியதாவது -

ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் அறிக்கையை நன்றாக ஆராய்ந்த பின்னரே அதன் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க எமது கட்சி தீர்மானித்தது.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற கட்சியின் உயர்நிலைக் கூட்டத்தில் ரணிலை ஆதரிக்கும் இறுதி முடிவு எடுக்கப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கவை வெற்றியடையச் செய்வதற்காக எமது கட்சி பாடுபடும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவுடனும் பேச்சு நடத்தப்பட்டது. எனினும் அவருடன் தற்போது இணைந்திருக்கும் கட்சியினருடன் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது.

இனப்பிரச்சினைக்கு நியாயமான, தெளிவான முடிவினை அந்தக் கூட்டணியால் முன்வைக்க முடியாது.

முஸ்லிம் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணல், சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு முஸ்லிம் பிரதேசங்களின் புனரமைப்பு மற்றும் சுனாமி நிவாரணசபையில் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தையும் உள்ளடக்கக்கூடிய வகையில் சில மாற்றங்களை ஏற்படுத்துதல் உட்பட நாங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் இணங்கியதை அடுத்து அவரை ஆதரிக்கத் தீர்மானித்தோம்.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் மற்றும் ஏனைய முஸ்லிம் கட்சிகளின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்கவிற்கு பெற்றுக்கொடுப்பதற்காக அந்தக் கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றோம்.

இலங்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்தவும், சமாதானத்தைக் கொண்டுவரவும் கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே. அவருக்கு ஆதரவு திரட்டும் வகையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனியான பிரசாரக் கூட்டங்களை நடத்தும். ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ளும் முக்கிய கூட்டங்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கலந்துகொள்ளும் என்றார்.

# ரணிலுக்கு...

இராஜினாமாக் கடிதங்கள் கையளிக்கப்படும் என அவர்கள் தெரிவித்தனர்.

இந்த மாநாட்டில் பெருமளவிலான ஊடகவியலாளர்கள் திரண்டிருந்தனர்.

இ.தொ.க.வின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த அறிவிப்பின் போது உடனிருந்தனர்.

# கல்முனையில்...

சைக்கிளில் வழமை போன்று சந்தைக்கு சென்று கொண்டிருந்த போது, உடையார் வீதியில் மோட்டார் சைக்கிளில் எதிர்கொண்ட நபர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டு தப்பிச்சென்று விட்டனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து கல்முனை பிரதேசத்தில் பதற்ற நிலை ஏற்பட்டது. அங்கு அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டன.

# முடிவை மாற்றினார்...

ஏற்படுத்தியிருப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததாக கூறப்படுகிறது.

ஐ.தே.கட்சியின் தீர்மானத்துக்கு முரணாக அவசர கால சட்டத்துக்கு வாக்களித்தமை, நாடாளுமன்றத்தில் வர்த்தமானி அறிவித்தலை கிழித்து எறிந்தமை, மலையக மக்கள் முன்னணியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.கட்சிக்கு ஆதரவளிப்பதற்காக பணம் கேட்டதாக கூறியமை ஆகியவை தொடர்பாக கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களிடையே விசனத்தை ஏற்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், மகேஸ்வரன் ஐ.தே. கட்சிக்கு கடந்த காலங்களில் ஆற்றிய பணிக்காக அவரை கட்சியிலிருந்து நீக்குவதற்கு கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளை பெறுவதற்காக வட - கிழக்குத் தவிர்ந்த ஏனைய தமிழ் பிரதேசங்களில் தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபடுமாறு மகேஸ்வரனிடம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கோரியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை இல.267 , நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 06.10.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.